## (ஈ) பணமும் வங்கித்தொழில் அபிவிருத்தியும்

### 1. (அ) பணநிரம்பல்— பொதுப்படையான போக்குகள்

பணநிரம்பலானது, 1967 திசெம்பர் இறுதிக்கும் 1968 திசெம்பர் இறுதிக்குமிடையில் 1,056 இலட்சம் ரூபாய்களால் அல்லது 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. 1968ம் ஆண்டில் பணநிரம்பலினது மாதாந்த சராசரி மட்டம் சென்ற ஆண்டிலும்பார்க்க 6.9 சதவீதத்தால் அதிகமாகவிருந்தது; இவ்வதிகரிப்பு, 1959-1965ம் ஆண்டுகளுக்கிடையிலேற்பட்ட சராசரி வீத அதிகரிப்பிலும்பார்க்கச் சிறிதளவு அதிகமாகவிருந்தது. 1968ம் ஆண்டின் பணநிரம்பல் அதிகரிப்பிற் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், 1959-65 ஆண்டுக் காலப்பகுதிகளில் பணநிரம்பலினது அதிகரிப்பு விகிதம் உண்மை உற்பத்தி வளர்ச்சி விகிதத்திலும்பார்க்க மேலதிகமாகவிருந்திருக்கையில், 1968ல் அது உண்மைத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் அளவிலேயே உயர்வுற்றது.

1963-68ம் ஆண்டுகளுக்கான பணநிரம்பலின் மாதவிறுதி எண்தொகைகளை அட்டவணை II (ஈ) 1 காட்டுகின்றது. பணநிரம்பலானது 1968 சனவரியிலேற்பட்ட 157 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து, பெப்புருவரியில் ஏறக்குறைய ஒரு நிலையான மட்டத்தையுடையதாயிருந்தது. ஆனால், அடுத்த மூன்று மாதங்களிலும் பிரதானமாக அரசாங்கத்திற்கான கொடுகடன் அதிகரிப்பினாலும், சிறிது குறைந்தளவில், தனியார் துறைக்கான கொடுகடன் ஆக்கத்தினாலும், அது ஏறக்குறைய 768 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. ஆயினும், யூன், யூலை மாதங்களிற் பிரதானமாகத் தனியார் துறைக்கான வெளிநின்ற வங்கிக் கொடுகடன் வீழ்ச்சியினால் அது 381 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது. ஓகத்தில் விரிவுப்போக்கு மீண்டும் தொடங்கிற்று. ஆண்டின் இறுதி ஐந்து மாதங்களிலும் பணநிரம்பல் 818 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தபோதும், இவ்வைந்து மாதங்களின்போதான மாதாந்தச் சராசரி விகித அதிகரிப்பு, மாச்சு-மே ஆகிய மூன்று மாதங்களினதிலும் பார்க்கக் குறைவாக விருந்தது. ஆண்டின் பிற்பகுதியிலேற்பட்ட பிரதான விரிவுச் சக்தி தனியார் துறைக்கான கொடுகடன் விரிவாகும்.

மீளப்பார்வையிடும் ஆண்டின்போது, புதுப் பண ஆக்க அதிகரிப்பு ஏற்பட்டதோடல்லாது, கொடுப்பனவு முறைகளிற் பணம் பயன்பட்ட விகிதமும் அதிகரித்தது. இது, நடைமுறை சந்தைக் கொள்விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்திக்கும் பண்நிரம்பலுக்குமுள்ள விகித சமத்தினால் அளவிடப்பட்டபடியான பண வருமான விசையில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இவ்விகிதம் 1967ல் 4.7லிருந்து 1968ல் 5.3ற்கு உயர்வுற்றது. இவ்வபிவிருத்திக்கான மேலுங்கூடிய சான்று, கேள்வி வைப்புக்களின் சுழல்வு வீத அதிகரிப்பிற் காணப்படுகின்றது. கேள்வி வைப்புக்களின் மாதாந்தச் சராசரிச் சுழல்வுவீதம் கடந்த மூன்று ஆண்டுகளிலும் வீழ்ச்சியுற்றிருந்தபின், 1967ம் ஆண்டிற்குரிய 1.60லிருந்து 1968ல் 2.06ற்குக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

1968ம் ஆண்டில், பணநிரம்பலின் மீதான விரிவுச் சக்திகள் சென்ற ஆண்டிலும்பார்க்கக் குறிப்பிடத்தக்களவு கூடுதலாகவிருந்தபொழுதும், இவை பாதகமான சென்மதி நிலுவையிலும், பொதுமக்கள் இரண்டாந்தரத் திரவத் தன்மையான நிதிச்சொத்துக்களை உடைமைகளாக்கிக்கொள்ளும் கதிகரிப்பினாலும், அரசாங்கத்தின் பணநிலுவைகளின் திராட்சியினாலும் குறிப்பிடத்தக்களவு மட்டுப்படுத்தப்பட்டன. பாதகமான சென்மதி நிலுவைகளினலான சுருக்கத்தாக்கம், பெப்புருவரி, யூலை, செத்தெம்பர் மாதங்கள் தவிர்த்து, அவ்வாண்டு முழுவதும் நிலவியது. வர்த்தக வங்கிகளினுடனான தவணை சேமிப்பு வைப்புக்கள், திசெம்பர் மாதம் தவிர்த்து, அவ்வாண்டு முழுவதும் தளராது உயய்வுற்றன.

1. (ஆ) பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகள்

பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகளின் பகுப்பாய்வு, அட்டவணை II (ஈ) 2ல் தரப்பட்டுள்ளது.

வெளிநாட்டுத்துறையானது ஆண்டு முழுவதும் பணநிரம்பலின்மீது குறிப்பிடத்தக்களவு விரிவுத்தாக்கத்தை விளைவித்தது. இது, 1957ல் நாட்டின் சென்மதி நிலுவைகளில் ஏற்பட்ட சீர்கேட்டுடன் ஆரம்பித்த போக்கின் தொடர்ச்சியாகும். 1968ம் ஆண்டில் நடைமுறைக் கணக்கின் மீதான சென்மதி நிலுவைக்குறை சென்ற ஆண்டிலும்பார்க்கக் குறிப்பிடத்தக்களவு கூடுதலாகவிருந்தது. 1968ம் ஆண்டின்போது பண்டவுதவிகளும் திட்ட உதவிகளும் பெருமளவிற் கிடைத்தமையால், இப் பணக்குறையினது முழு அதிகரிப்பும் வங்கித் தொழிலின் அந்நிய இருப்புச் சொத்துக்களிலிருந்து எடுப்பனவு செய்வதன் மூலமாகவும், வங்கித் தொழிலின் வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகரிப்பதன் மூலமாகவும் நிதியீட்டப்படவேண்டிய தேவை ஏற்படவில்லை. ஆகவே, நடைமுறைக் கணக்கின் மீதான சென்மதி நிலுவைக்குறை 3,460 இலட்சம் ரூபாய்களாக விளங்கியபோதும், இப் பணக்குறையின் நாணய விளைவு 1,157 இலட்சம் ரூபாய்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இது, வெளிநாட்டு வங்கித் தொழில் இருப்புச் சொத்துக்களின் தேறிய சிறு அதிகரிப்பு நீங்கலான வெளிநாட்டு வங்கித் தொழில் பொறுப்புக்களின் அதிகரிப்பாகப் பிரதிபலிக்கின்றது.

ஆண்டுத் தொடக்கத்தில் ஏற்கெனவே குறைந்த மட்டத்திலிருந்த மத்திய வங்கியின் சர்வதேச ஒதுக்கு 1968ம் ஆண்டின்போது 248 இலட்சம் ரூபாய்களால் மேலும் வீழ்ச்சியுற்றது. மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 1,209 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பின் பிரதான கூறு நிவாரண நிதியீட்டற்றிட்டத்தின் கீழான எடுப்பனவுகளினாலும், மூன்றாவது துணைநில் உடன்படிக்கையின்கீழான மீளக் கொள்வனவுகளினாலும் தோன்றிய சர்வதேச நாணய நிதிக்கான 1,742 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பொறுப்புக்களின் அதிகரிப்பாகும். இவ்வாண்டின்போது இருபுடைக் கொடுப்பனவு உடன்படிக்கைகளின்கீழ் அந்நிய நாடுகளுக்கான பொறுப்புக்கள், பிரதானமாக வெளிநின்ற நிலுவைகளைக் குறைத்தமையால், 235 இலட்சம் ரூபாய்களாற் குறைக்கப்பட்டன. 1967 இறுதியில் 571 இலட்சம் ரூபாய்களாகவமைந்த வெளிநாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற மத்திய வங்கிக் கடன்பாடுகள் 1968ம் ஆண்டுத் தொடக்கத்தில் முற்றாகத் திருப்பிக்கொடுக்கப்பட்டன; ஆனால், திசெம்பரில் 286 இலட்சம் ரூபாய்கள் கொண்ட புதிய கடன்பாடு பெறப்பட்டது. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும் 1968ம் ஆண்டில் 73 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. ஆனால், இவ்வதிகரிப்பு அவற்றின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் 374 இலட்சம் ரூபாய்கள் கொண்ட திரட்சியினால் மேலதிகமாக ஈடுசெய்யப்பட்டது.

வெளிநாட்டுத்துறைப் பணநிரம்பலின்மீது சுருக்கத் தாக்கத்தை விளைவித்திருக்கையில், அதனை எதிரீடுசெய்யும் முறையில் தனியார் துறைக்கான கொடுகடன் ஆக்கத்திலிருந்தும், அரசாங்க நிதியிலிருந்தும் விரிவுச் சக்திகள் தோன்றின. சென்ற ஆண்டினைப்போல அரசாங்க நிதித் தொழிற்பாடுகள் கூடிய விரிவுச் சக்தியுடையனவாக விளங்கின. எனினும், 1968ல் அரசாங்கத் துறையே காரணமாகவிருந்த விரிவுத் தாக்கம் 1,224 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 1967ம் ஆண்டினதிலும்பார்க்க அரைப்பங்கிலும் குறைவுற்று விளங்கியது. 1968ம் ஆண்டில் வங்கி நிதியீட்டலில் குறைந்தளவு தங்கியிருந்தமை, பெருமளவு இணைக்கிணை நிதிகளின் கூடிய திரட்சியினால், மேயில் நடைமுறைக்கு வந்த அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்திலிருந்து பெற்ற மேலதிகமான வருமானத்தினாலும் இயலுமானதாகவிருந்தது.

அட்டவணை II (ச) 2

## பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களும் அடிப்படைக் காரணிகளும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1962–63 விரிவுக் காரணிகள் | 1962–63 சுருக்கக் காரணிகள் | 1963–64** விரிவுக் காரணிகள் | 1963–64** சுருக்கக் காரணிகள் | 1964–65** விரிவுக் காரணிகள் | 1964–65** சுருக்கக் காரணிகள் | 1965–66** விரிவுக் காரணிகள் | 1965–66** சுருக்கக் காரணிகள் | 1966–67** விரிவுக் காரணிகள் | 1966–67** சுருக்கக் காரணிகள் | 1967–68 விரிவுக் காரணிகள் | 1967–68 சுருக்கக் காரணிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) ... | — | 53.2 | 16.9* | — | 79.8† | — | — | 196.3 | — | 91.5 | — | 115.7 |
| 2. தனியார் துறை †† ... ... ... | 133.1 | 63.4 | 82.6 | 57.1 | 19.2 | 75.4 | 137.2 | 79.6 | 105.6 | 133.1 | 264.1 | 165.5 |
| (அ) ஏனைய தனியார் துறைக் கூறுகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ... ... ... | 125.0 | — | 82.6 | — | 10.0 | — | 33.5 | — | 86.9 | — | 155.0 | — |
| (ஆ) கூட்டுறவு நிலையங்களுக்குள்ளான வர்த்தகவங்கிக்கொடுகடன் | — | — | — | — | — | 6.9 | 25.8 | — | 7.3 | — | 18.5 | — |
| (இ) கூட்டுறவு நிலையங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ... | — | — | — | — | — | 2.1 | — | 2.3 | — | 1.4 | — | 1.5 |
| (ஈ) ஏனைய தனியார் துறைக் கூறுகளின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ... ... ... | — | 63.4 | — | 52.2 | — | 46.2 | — | 65.3 | — | 49.5 | — | 99.9 |
| (உ) வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (தேறிய) அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 8.1 | — | — | 4.9 | — | 20.2 | — | 12.0 | — | 31.0 | — | 40.9 |
| (ஊ) அ. கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தகவங்கிக் கொடுகடன் | — | — | — | — | 7.8 | — | 27.7 | — | 11.4 | — | 90.6 | — |
| (எ) வர்த்தக வங்கிகளிடமுள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... ... | — | — | — | — | 1.4 | — | 50.2 | — | — | 51.2 | — | 23.2 |
| 3. அரசாங்கத்துறை | 166.2 | 19.0 | 133.6 | 58.0 | 120.3 | 53.2 | 207.5 | 125.5 | 267.8 | — | 306.9 | 184.5 |
| (அ) வ. வங்கி உடைமைகள் இறைசேரி உண்டியல்கள், அரச, அரச உத்தரவாதப் பிணைகள், அரசாங்க இறக்குமதி உண்டியல்கள். | 19.7 | — | 3.6 | — | 92.3 | — | — | 62.6 | 75.3 | — | — | 114.9 |
| (ஆ) மத்திய வங்கி உடைமைகளாகிய இறைசேரி உண்டியல்களும் அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகளும் ... ... | 139.5 | — | 123.2 | — | — | 38.7 | 155.9 | — | 109.9 | — | 269.4 | — |
| (இ) மத்திய வங்கியின் முற்பணங்கள் ... ... ... | 7.0 | — | 6.8 | — | 28.0 | — | 26.4 | — | 12.7 | — | 37.5 | — |
| (ஈ) மத்தியவங்கியின் ஏனையபொறுப்புகளும்கணக்குகளும்(தேறிய) | — | 10.7 | — | 54.8§ | — | 4.5 | 25.2 | — | 13.9 | — | — | 0.2 |
| (உ) வங்கிகளிலுள்ள அரசாங்க வைப்புக்களும் திறைசேரியிலும், கச்சேரிகளிலும் உள்ள பண மிச்சங்களும் ... ... | — | 8.3 | — | 3.2 | — | 10.0 | — | 62.9 | 56.0 | — | — | 69.4 |
| 4. இடைப்போக்கிலுள்ள விடயங்களின் சீராக்கங்கள் ... ... | — | 0.2 | — | 2.3 | 3.2 | — | — | 0.1 | — | 0.1 | 0.2 | — |
| மொத்த விரிவு/சுருக்கக் காரணிகள் ... ... ... | 299.3 | 135.8 | 233.1 | 117.4 | 222.5 | 128.6 | 344.7 | 401.5 | 373.4 | 224.7 | 571.2 | 465.7 |
| பணநிரம்பலின் மாற்றம் ... ... ... ... | +163.3 | | +115.8 | | + 93.8 | | — 56.8 | | +148.7 | | +105.6 | |

* 1964ம் ஆண்டு மாசி மாதம், அரசாங்க நிலையங்களிலிருந்து, மத்திய வங்கி கொள்வனவு செய்த 533 இலட்சம் ரூபாய்கள் முகவரி பெறுமானமுள்ள வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை உள்ளடக்கும். இக் கொடுக்கல்வாங்கலுக்கு இடமளிக்கும்போது, வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் இவ்வாண்டு 364 இலட்சம் ரூபாய்களால் உண்மையில் வீழ்ச்சியுற்றன.

† 1965ம் ஆண்டு வைகாசி மாதம் அரசாங்க நிலையங்களிலிருந்து மத்திய வங்கி கொள்வனவு செய்த 301 இலட்சம் ரூபாய்கள் முகவரில் பெறுமானமுள்ள வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை உள்ளடக்கும் இக் கொடுக்கல்வாங்கலுக்கு இடமளிக்கும்போது வங்கிகளின் தேறிய வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் 496 இலட்ச ரூபா அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றன. அரசாங்க நிலையங்களுக்கான கொடுப்பனவு, ரூபாய்களில் கொடுக்கப்பட்டது. இது பணநிரம்பலில் நேரடி விரிவுத் தாக்கத்தை ஏற்படுத்தியது.

†† கழிவுபட்ட ஏற்றுமதி உண்டியல்களின் பெறுமானம் வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின்கீழ் அடக்கப்பட்டுள்ளன.

$ கூட்டுறவு நிலையங்களையும், அரசாங்க கூட்டுத்தாபனங்களையும் பொறுத்தமட்டில் 1964–65ம் ஆண்டுக் காலத்திற்கு மட்டுமே தரவுகள் இதத்தனியாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. முன்னைய காலங்களுக்கான இத் தரவுகள் "ஏனைய தனியார் துறைக் கூறுகளின்" கீழ் அடக்கப்பட்டுள்ளன.

§ அரசாங்க நிலையங்களுக்கான, மத்திய வங்கியினது பொறுப்புக்களின் அதிகரிப்பில் ரூபா 533 இலட்சமானது, அரசாங்க நிலையங்களுக்கான மத்திய வங்கியின் சமமான பெறுமானமுள்ள பிணைகளின் வெளியீடுகளை எடுத்துக்காட்டுகின்றது. எனினும், இதன் காரணமாக தேறிய பண ஆக்கம் ஏற்படவில்லை.

** இவ்வட்டவணையிலுள்ள தொகைக்கும், முந்திய ஆண்டறிக்கைகளிலுள்ள தொடர்பான தொகைகளுக்குமிடையிலான வேறுபாடு திருத்தியமைப்புக்களில் ஏற்பட்டதாகும்.

மீளப்பார்வையிடும் ஆண்டில், மத்திய வங்கிக்கான அரசாங்கக் கடன்பாடு 3,069 இலட்சம் ரூபாய்களால் உயர்வுற்றது. இது மத்திய வங்கியின் அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணை உடைமைகளின் 2,694 இலட்சம் ரூபாய்களேயும், தற்காலிக முற்பணங்களில் 350 இலட்சம் ரூபாய்களேயும், விசேடக் கடன்களில் 25 இலட்சம் ரூபாய்களேயும் கொண்ட அதிகரிப்புக்களேக் கொண்டதாகும். சென்ருண்டிற் சேர்ந்துள்ள அரசாங்க இறக்குமதி உண்டியல்களின் பெருமளவு தொகையிஞலேற்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான அரசாங்கக் கடன்பாட்டைக் குறைப்பதற்காக மத்திய வங்கிக்கான கடன்பாட்டில் இக்குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டது. 1968ம் ஆண்டில் வர்த்தக வங்கிகளின் இவ்வுண்டியல் உடைமைகள் 1,250 இலட்சம் ரூபாய்களாற் குறைக்கப்பட்டன. வர்த்தக வங்கிகளின் அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள் உடைமைகள் 101 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. ஆகவே, 1968ம் ஆண்டில் வங்கித் தொழில்முறைக்கான அரசாங்கக் கடன்பாட்டின் தேறிய அதிகரிப்பு 1,920 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இது, சென்ற ஆண்டில் மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்குமான அரசாங்கக் கடன்பாட்டு அதிகரிப்பு காணப்பட்டபோதிருந்த ஒப்பியல் தொகையிலும்பார்க்கச் சிறிது குறைவானதாகும். 1968ம் ஆண்டில் அரசாங்கத்தின் நிதி இயக்கங்களிஞல் ஏற்பட்ட விரிவுத் தாக்கம் குறைவுற்றிருந்தமை அரசாங்கத்தின் பண மிச்சங்களிலேற்பட்ட தேறிய திரட்சியான 694 இலட்சம் ரூபாய்களிற் பிரதிபலிக்கப்பட்டது. இவை, பெரும்பாலும் இணேக்கிணே நிதிகளாகும். இதற்கு எதிர்மாருக ஒப்பியல்பான 1967ம் ஆண்டுப் பணமிச்சங்கள் 560 இலட்சம் ரூபாய்களாற் குறைக்கப்பட்டிருந்தன.

தனியார் துறைக்கான (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் உட்பட) வங்கிக் கொடுகடன் அதிகரிப்பு 1968ல் 2,641 இலட்சமாக இருந்தது. இது, கடந்த ஆண்டின் ஒப்பியல்பான தொகையிலும்பார்க்க இரு மடங்கிற்கும் மேலாக இருந்ததுமன்றி இதுவரை பதிவுசெய்யப்பட்ட மொத்த அதிகரிப்புகள் சதவீத அதிகரிப்புகளிலும்பார்க்க மிகக் கூடியதாகும். 1968ம் ஆண்டில் ஆக்கப்பட்ட கொடுகடனில் அதிகரித்த தொகைகள் கூட்டுறவு நிலேயங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், குறிப்பாக ஏனேய தனியார் துறைக் கடன்பெறுநர்களால் உபயோகிக்கப்பட்டன. சகல வகுப்பைச் சேர்ந்த கடன்பெறுநர்களினதும் அதிகரித்த கொடுகடன் தேவைகள் தனியார் துறையிற் காணப்பட்ட உயர்ந்த பொருளியற் செயற்பாடுகளிஞல் ஏற்பட்டதாகும். அவை, பிரதானமாக விவசாய உற்பத்தி உந்தப்பட்டமையிலிருந்தும், கைத்தொழிற் தொழிற்பாடுகள் அதிகரித்தமையிலிருந்தும், விவசாயம், பண்டத் தயாரிப்புத் தொழிற்களிலேற்பட்ட கொடுகடன் தேவைகளிஞலாகும்.

விவசாயக் கொடுகடன் திட்டத்தின்கீழான கூட்டுறவுச் சங்கங்களுக்காய வங்கிக் கொடுகடன்களில் வெளிநின்ற தொகை 1967 இறுதிக்கும் 1968 இறுதிக்குமிடையில் 147 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. ஆண்டிறுதியில் உத்தரவாத விலேத் திட்டத்தின்கீழ் அரசாங்கத்திஞல் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு அதிகரித்தமையைப் பிரதிபலித்து, கூட்டுறவுகளுக்கான பொருள்வரவு முற்பணங்கள் 72 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடன் 906 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பிற் பெரும்பகுதி ஆண்டின் பின்னரைப் பகுதியில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்கான நிதியீட்டம் அரசாங்கத்திலிருந்து வர்த்தக வங்கிகளிஞற் கைக்கொள்ளப்பட்டபோது ஏற்பட்டதாகும். கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடன் அதிகரிப்பில், ஒரு பகுதி இவ்வாண்டின் இறுதிக் காலத்திற் கூட்டுத்தாபனங்களின் இறக்குமதியளவுகள் அதிகரித்தமையிஞல் ஏற்பட்டதாகும்.

தனியார் துறையின், ஏனைய கடன் பெறுநர்க்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1968ல் 1,550 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. கடன்கள் 779 இலட்சம் ரூபாய்களாலும், மேலதிகப் பற்றுக்கள் 703 இலட்சம் ரூபாய்களாலும், இறக்குமதி உண்டியல்கள் 184 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்திருக்கையில், ஒன்றுசேர்க்கப்படுகின்ற பண விடயங்களான வர்த்தக வங்கி உடைமைகள் 117 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. கடன்களையும், மேலதிகப் பற்றுக்களையும் அதிகரிப்பதினுல் ஆக்கப்பட்ட மேலதிக நிதிவளம் முக்கியமாகக் கைத்தொழில் வர்த்தகத் துறைகளுக்கேயாகும். ஆயினும், ஏனைய துறைகளுக்கான கொடுகடன் அதிகரிப்புகளும் காணப்பட்டன.

இவ்வாண்டின்போது, தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 2,641 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தபோதிலும், இத்துறையினுல் பணநிரம்பலின்மீது ஏற்பட்ட விரிவுத் தாக்கம் ஆக 986 இலட்சம் ரூபாய்களாகவிருந்தது. இது ஏனெனில், கொடுகடன் அதிகரிப்பினுல் ஏற்பட்ட விரிவு விளைவுகளை ஓரளவில், ஈடுசெய்து வர்த்தக வங்கிகளிலுள்ள தனியார் துறைத் தவணைச் சேமிப்பு வைப்புக்கள் 1,246 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருந்தமையாலாகும். கூட்டுத்தாபனங்களினது தவணைச் சேமிப்பு வைப்புக்கள் 232 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், தனியார் துறை உறுப்புக்களின் வைப்புக்கள் 1,014 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளின் ''ஏனைய பொறுப்புக்களும் (தேறிய)'' 409 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருந்தமை, தனியார் துறைக்கான கொடுகடன் அதிகரிப்பின் விரிவு விளைவை ஈடுசெய்ய உதவிற்று.

சுருங்கக்கூறின், 1968ம் ஆண்டில் பணநிரம்பலின்மீது தேறிய விரிவினை விளைவிக்கத்தக்க பல்வகை முரண்பாடான காரணிகள் காணப்பட்டன. அந்நிய துறை ரூபா 1,157 இலட்சம் கொண்ட சுருக்கத் தாக்கத்தை விளைவித்ததெனினும், அரசாங்கத்தினதும், தனியார் துறையினதும் நிதி இயக்கங்களிலிருந்து எழுந்த விரிவுத் தாக்கம் அதனை எதிரீடுசெய்யக்கூடியதாயிருந்தது. வங்கிகளுக்கான அரசாங்கக் கடன்பாட்டிலேற்பட்ட 1,920 இலட்சம் ரூபா கொண்ட அதிகரிப்பு முந்திய ஆண்டினதிலும்பார்க்கக் குறைவாகவிருந்ததுமன்றி, பணநிரம்பலின்மீதான அதன் விரிவுத் தாக்கமும், அரசாங்கப் பணமிச்சங்களில் ஏற்பட்ட 694 இலட்சம் ரூபா கொண்ட சேர்க்கையினுற் தணிக்கப்பட்டது. தனியார் துறைக்கான கொடுகடன் அதிகரிப்பு 1968ல் ஓர் உச்சமட்டமான 2,641 இலட்சமாகவிருந்ததெனினும், அதன் விரிவுத் தாக்கம் வங்கிகளிலுள்ள தவணை, சேமிப்பு வைப்புக்கள் ஒன்றுகூடியமையினுல் மட்டப்படுத்தப்பட்டது. எனவே, நாணய விரிவிற்கான இரு மூலங்களிலிருந்தும் — அவையாவன அரசாங்கத்தினதும், தனியார் துறையினதும் நிதி இயக்கங்கள் — தோன்றிய வங்கிக் கொடுகடன்களை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் அத்துறைகளிலிருந்து தோன்றிய சுருக்கக் காரணிகளினுல் எதிரீடுசெய்யப்பட்டன. அந்நிய துறையிலிருந்து தோன்றிய சுருக்க விளைவுகளையும் சேர்த்து நோக்குமிடத்து, இவ்வாண்டில் பணநிரம்பலின்மீது ஏற்பட்ட அதிகரிப்பு 1,056 இலட்சம் ரூபாய்களாகும்.

## 1. (இ) வங்கியல்லாத் தனியார் துறையின் திரவநிலை

தனியார் துறையின் நிதிச் சொத்துக்கள் 1968ல் அதிகரித்தன. 1966—1967 காலப்பகுதியில் வங்கியல்லாத் தனியார் துறையின் முதற்தர, இரண்டாந்தரத் திரவச் சொத்துக்களின் பகுப்பு அட்டவணை II (ஈ) 3ல் கொடுக்கப்பட்டுள்ளது. பணம், கேள்வி வைப்புக்கள் ஆகிய முதற்தரத் திரவச் சொத்துக்களான ரூபா 1,056 இலட்சம் கொண்ட அதிகரிப்பைவிட இரண்டாந்தரத் திரவச் சொத்துக்களும் 1967 இறுதியிலிருந்த மட்டத்தினைவிட ரூபா 2,523 இலட்சத்தால் அதிகரித்தன. 1968ல் இரண்டாந்தரத் திரவச் சொத்துக்களிலேற்பட்ட அதிகரிப்பு முந்திய ஆண்டிலும்பார்க்க மிகக் கூடியதாகும். எனவே, ஆண்டின் இறுதியில் மொத்தத் திரவச் சொத்துக்களில் இரண்டாந்தரத் திரவச் சொத்துக்கள் வகிக்கும் விகிதசமம் கடந்த ஆண்டிலிருந்த 54.1 சதவீதத்திலிருந்து 55.5 சதவீதத்திற்கு மிகைவுற்றது. திரவச் சொத்துக்களின் அமைப்பானது, பொது மக்கள் சிலவகை நிதிச் சொத்துக்களின்மீது கூடிய முந்துரிமை கொண்டுள்ளவை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

## அட்டவணை II (ஈ) 3

### வங்கிகளல்லாத தனியார் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள்

| விபரம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | மொ. தே. உ. இன் சதவீதம் (அ) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1966(ஆ) | 1967 | 1968 | 1966(ஆ) | 1967 | 1968 |
| 1. முதன்மைத் திரவ இ.சொத்துக்கள் | | | | | | |
| (அ) நாணயத் தாள்கள், குத்திகள் | 882.5 | 979.9 | 1,066.2 | 11.5 | 11.9 | 10.9 |
| (ஆ) கேள்வி வைப்புக்கள் ... | 776.4 | 827.7 | 847.0 | 10.1 | 10.1 | 8.6 |
| மொத்தம் ... ... | 1,658.9 | 1,807.6 | 1,913.2 | 21.5 | 22.0 | 19.5 |
| சதவீதம் ... ... | | +9.0 | +5.8 | | | |
| 2. இரண்டாந்தர திரவ இ. சொத்து | | | | | | |
| (அ) வர்த்தக வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... | 243.3 | 271.7 | 319.6 | 3.2 | 3.3 | 3.3 |
| (ஆ) தபாற்கந்தோர் சேமிப்பு வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... ... | 438.4 | 450.6 | 463.0* | 5.7 | 5.5 | 4.7 |
| (இ) இலங்கை சேமிப்பு வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... | 91.2 | 93.2 | 96.9* | 1.2 | 1.1 | 1.0 |
| (ஈ) வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்கள் ... | 341.2 | 414.9 | 491.7 | 4.4 | 5.0 | 5.0 |
| (உ) குடியிருப்போரின் அந்நிய மிச்சங்கள் ... ... | 7.3 | 13.2 | 15.7* | 0.1 | 0.2 | 0.2 |
| (ஊ) சேமிப்புப் பத்திரங்கள் ... | 56.5 | 78.7 | 91.3 | 0.7 | 1.0 | 0.9 |
| (எ) இறைசேரி உண்டியல்கள் ... | 13.5 | 6.2 | 11.5 | 0.2 | 0.1 | 0.1 |
| (ஏ) வரி ஒதுக்கு நிதிப்பத்திரங்கள் | 30.0 | 24 1 | 23.9 | 0.4 | 0.3 | 0.2 |
| (ஐ) அரசாங்க முறிகள் ... | 705.7 | 783.0 | 874.3 | 9·2 | 9.5 | 8.9 |
| மொத்தம் ... ... | 1,927.1 | 2,135.6 | 2,387.9* | 25.0 | 26.0 | 24.3 |
| சதவீத மாற்றம் ... | | +10.8 | +11.8 | | | |
| 3. தனியார் துறையின் மொத்த திரவ இ. சொத்துக்கள் சதவீத மாற்றம் | 3,586.0 | 3,943.2<br>+10.0 | 4,301.1*<br>+9.1 | 46.6 | 47.9 | 43.8 |
| தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி, ஊழியர் சேம நிதி போன்ற அரசாங்க நிதித்தாபனங்கள் வசமுள்ள அரசாங்க முறிகளும், இறைசேரி உண்டியல்களும் மேலே சேர்க்கப்படவில்லை. | 1,447.9 | 1,639.6 | 1,859.1 | 18.8 | 19.9 | 18.9 |

* தற்காலிகமானவை. மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) நடைமுறைச் சினைக்கொள் விலைகளின்படி.

(ஆ) இவ்வெண்தொகைகளுக்கும், முந்திய ஆண்டறிக்கைகளில் பிரசுரிக்கப்பட்ட தொடர்பான எண்தொகைகளுக்குமுள்ள வித்தியாசங்கள் திருத்தங்களினாலேற்பட்டதாகும்.

இருவகையான முதற்தரத் திரவச் சொத்துக்களில், நாணயம் வகிக்கும் விகிதசமம் அதிகரித்துள்ளது. பொதுமக்கள் கேள்வி வைப்புக்களிலும் பார்க்க நாணயத்திற்கே அதிகரிப்பான முந்துரிமை காட்டுகின்றமைபற்றிக் கடந்த சிலவாண்டுகளின் ஆண்டறிக்கைகளிற் கவனத்திற்கீர்க்கப்பட்டது. கீழேயுள்ள அட்டவணை II (ஈ) 4, இவ்வதிகரித்த போக்கைக் காட்டுவதோடு 1968ல் மொத்தப் பணநிரம்பலில் நாணயம் வகித்த விகிதசமம் 55.7 சதவீதமாக மேலும் அதிகரித்து, ஆண்டிறுதிக்கென என்றும் அடையப்பெருத உயர்ந்த மட்டத்தைப் பதிவுசெய்துள்ளமையையும் காட்டுகின்றது. நாணயத்தின் விகிதசமம் இவ்வாறு அதிகரிக்கும்போக்கோடு தொடர்ப்பட்டுப் பெரிய இன நாணயத் தாள்களின் வெளியீடும் அதிகரித்துள்ளது. அட்டவணை II (ஈ) 5, 1965ம் ஆண்டு முதல் 100 ரூபா இனங்களைச் சேர்ந்த நாணயத் தாள்களின் வெளியீடு, 5 ரூபா, 10 ரூபா, 50 ரூபா இனத்தைச் சேர்ந்த தாள்களின் வெளியீட்டிலும்பார்க்கக் கூடிய துரிதமாக அதிகரித்துவந்துள்ளதென்பதையும் ஒவ்வொரு ஆண்டிலும் மொத்த நாணய வெளியீட்டிலேற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்கக் கூடிய துரிதமாக அதிகரித்துள்ளதென்பதையும் காட்டுகின்றது.

## அட்டவணை II (ஈ) 4

### பணநிரம்பலின் கூறுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் | பொதுமக்களிடமுள்ள நாணயம் | | பொதுமக்களிடமுள்ள கேள்விவைப்புக்கள் | | மொத்த பணநிரம்பல் |
|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்த பணநிரம்பலின் சத வீதமாக | தொகை | மொத்த பணநிரம்பலின் சத வீதமாக | |
| 1955 ... ... ... | 384.5 | 35.8 | 688.4 | 64.2 | 1,072.9 |
| 1956 ... ... ... | 401.1 | 35.6 | 725.7 | 64.4 | 1,126.8 |
| 1957 ... ... ... | 434.9 | 41.8 | 605.2 | 58.2 | 1,040.1 |
| 1958 ... ... ... | 529.8 | 49.2 | 546.9 | 50.8 | 1,076.8 |
| 1959 ... ... ... | 565.0 | 48.0 | 612.7 | 52.0 | 1,177.7 |
| 1960 ... ... ... | 595.3 | 49.2 | 613.6 | 50.8 | 1,208.9 |
| 1961 ... ... ... | 692.2 | 53.8 | 596.4 | 46.2 | 1,288.6 |
| 1962 ... ... ... | 712.6 | 53.1 | 630.0 | 46.9 | 1,342.7 |
| 1963 ... ... ... | 828.4 | 55.0 | 677.7 | 45.0 | 1,506.0 |
| 1964 ... ... ... | 853.0 | 52.6 | 768.8 | 47.4 | 1,621.8 |
| 1965 ... ... ... | 901.4 | 52.5 | 814.3 | 47.5 | 1,715.7 |
| 1966 ... ... ... | 882.5 | 53.2 | 776.4 | 46.8 | 1,658.9 |
| 1967 ... ... ... | 979.9 | 54.2 | 827.7 | 45.8 | 1,807.6 |
| 1968 ... ... ... | 1,066.2 | 55.7 | 847.0 | 44·3 | 1,913.2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (ஈ) 5

### நாணய அமைப்பு — 100, 50, 10, 5 ரூபாய்களைக்கொண்ட இனங்களின்படி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் | ரூ. 100 | ரூ. 50 | ரூ. 10 | ரூ. 5 | நாணய வெளியீடு* |
|---|---|---|---|---|---|
| 1955 ... ... ... | 113.7 | 88.0 | 145.7 | 28.2 | 425.0 |
| 1956 ... ... ... | 114.9 | 97.7 | 148.0 | 30.0 | 443.4 |
| 1957 ... ... ... | 116.5 | 116.7 | 155.8 | 29.9 | 475.1 |
| 1958 ... ... ... | 157.5 | 143.6 | 184.0 | 33.7 | 578.3 |
| 1959 ... ... ... | 174.5 | 152.1 | 193.5 | 36.2 | 621.3 |
| 1960 ... ... ... | 148.4 | 148.4 | 237.6 | 40.1 | 644.6 |
| 1961 ... ... ... | 211.9 | 180.3 | 254.6 | 42.1 | 763.8 |
| 1962 ... ... ... | 238.2 | 186.8 | 241.9 | 42.8 | 789.4 |
| 1963 ... ... ... | 275.3 | 236.7 | 257.6 | 46.5 | 900.9 |
| 1964 ... ... ... | 168.4 | 258.3 | 359.5 | 55.5 | 932.1 |
| 1965 ... ... ... | 239.9 | 297.8 | 319.7 | 50.5 | 1,002.8 |
| 1966 ... ... ... | 272.0 | 292.9 | 288.2 | 48.6 | 993.7 |
| 1967 ... ... ... | 316.2 | 313.1 | 296.3 | 51.3 | 1,072.8 |
| 1968 ... ... ... | 393.7 | 330.6 | 299.5 | 55.3 | 1,181.9 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* 2, 1 ரூபா இனத் தாள்களும், சகல நாணயக்குத்திகளும் அடங்கும்.

1964, 1965ம் ஆண்டுகளில் நாணயத்தின் விகிதசமம் தற்காலிமாகக் குறைவுற்றமையோடு 100 ரூபா இனத்தைச் சேர்ந்த தாள்களின் வெளியீடும் ஏனைய சிறிய இனத்தைச் சேர்ந்த தாள்களிலும்பார்க்க ஒப்பியல்பிற் குறைவடைந்தமைக்குரிய காரணம், பெரிய இன நாணயத் தாள்களின் வடிவத்தில் வெளிக்காட்டாது சொத்துக்களைப் புதைத்து வைத்திருப்பதற்கும், வரிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படக் கூடுமெனப் பொதுமக்கள் எதிர்பார்த்தமையாயிருக்கக்கூடுமென அவ்வாண்டுகளின் ஆண்டறிக்கைகளிற் கூறப்பட்டது. இவ்விகித சமமானது 1966ம், 1967ம் ஆண்டுகளில் மீண்டும் மேல்நோக்கிச் சென்றமை, அந்நடவடிக்கைகளினாலேற்பட்ட மீதிகள் குறைவுற்றமையோடும், புகைத்தல் வரிகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுதல்கள் நிலவுவதோடும் தொடர்புடையதெனக் கூறப்பட்டது.

மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் கேள்வி வைப்புக்களினது உடைமையாளர்களின் அமைப்பிலேற்பட்ட மாற்றங்களினால் நிரூபிக்கக் கூடியனவாகக் காணப்படுகின்றன. வர்த்தக நிறுவனங்களின் உடைமையான மொத்தக் கேள்வி வைப்புக்கள், அளவிலும் விகித சமத்திலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றன. இத் துறையிற்றான், விலைக் கட்டுப்பாடுகள் இறக்குமதித் தடைகள், நிரம்பற் தட்டுப்பாடுகளின் விளைவால் கறுப்புச் சந்தைத் தொழிற்பாடுகள் அதிகரித்து, கொடுக்கல்வாங்கல்களையும் இலாபங்களையும் மறைப்பதற்கும், வரிகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கும், நாணயத் தேவைகளின் பிரதானமாக ஏற்பட்டுள்ளன. அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனங்களின் தவணை வைப்புக்கள் கணிசமாக அதிகரித்திருக்கையில், தனியார் வர்த்தக நிலையங்களின் தவணை வைப்புக்களேதும் அதிகரிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

1966ன் பின்னர், வங்கி வைப்புக்களிலும்பார்க்க நாணயத்தைப் பயன்படுத்தல் அதிகரித்துள்ளமைக்கு வேறோர் காரணம், நாட்டுப் புறங்களில் உயர்ந்த உற்பத்தி அதிகரித்த விலைகள் ஆகியவற்றின் பயனாலேற்பட்ட வருமான உயர்ச்சிகளில் அமையக்கூடும். புதிய கிராமியத் தொழில்களிற் சம்பளக் கொடுப்பனவுகளும், நெல், ஏனைய விவசாயப் பொருட்களுக்கான கொடுப்பனவுகளும் பிரதானமாக நாணயத்திலேயே செய்யப்படுகின்றன. வருமான அதிகரிப்பின் பயனாகக் கிராமியச் சனங்களின் வங்கி வைப்புக்கள், அதிகரித்துள்ளபோதிலும், இவ்வதிகரிப்பு வங்கித் துறையிலுள்ள வைப்புக்களிலேற்பட்ட முழு அதிகரிப்பில் ஒரு சிறு விகிதாச்சாரமாகவேயுள்ளதென்பது நாணயத்தாள்கள் புதைத்து வைப்பதற்கு உபயோகிக்கப்படுதல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

பணநிரம்பலில் நாணயத்தின் விகிதசமம் அதிகரித்துள்ளமை தெரிவிப்பது யாதெனில், கேள்வி வைப்புக்கள் பணநிரம்பலுக்குச் சமமாக அதிகரிக்கவில்லையென்பதையேயாகும். பண நிரம்பலிலேற்பட்ட 1,056 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மொத்த அதிகரிப்பில் 193 இலட்சம் ரூபாய்கள் மட்டுமே கேள்வி வைப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பாக விளங்கியது. பணநிரம்பலின் சராசரி மாதாந்த மட்டம் 1967லும்பார்க்க 6.9 சதவீதம் அதிகமாக இருக்கையில், கேள்வி வைப்புக்களின் சரார மாத இறுதியிலான மட்டம் 8,274 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 1967லும் 2.0 சதவீதம் அல்லது 163 இலட்சம் மாத்திரமே அதிகமாக அமைந்தது. எனினும், கேள்வி வைப்புக்களின் சுழல்வுவீதம், 1968ல் முன்பு காணாத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 1967ன் 1.60 உடன் ஒப்பிடுகையில், 1968ன் சராசரி மாதாந்தச் சுழல்வுவீதம் 2.06ஆக அமைந்து, 28.7 சதவீத அதிகரிப்பைக் காட்டிற்று. 1968ல், மாதாந்தச் சுழல்வுவீதங்கள், முந்திய ஆண்டின் தொடர்பான காலங்களிலும்பார்க்க நிலையாக அதிகரித்திருந்து, ஆண்டின் பிற்கால அரைப்பகுதியில் கூடுதலாக அதிகரித்திருந்தது.

வைப்புக்கள் முற்பணங்கள் சம்பந்தமாக மத்திய வங்கியின் அரையாண்டு அளவையிலிருந்து பெறப்பட்ட, வங்கிகளுடனுன வைப்புக்களின் பரந்த உடைமைப் பகுப்புக்களை அட்டவணை II (ஈ) 6 காட்டுகின்றது. இந்த அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள உடைமையாளர்கள் பகுப்புக்களில், பெருந்தோட்டங்களின் கேள்வி வைப்புக்கள் மிகப் பெரிய அதிகரிப்பைக் காட்டின. 1966லும் 1967லும் ஏற்பட்ட வீழ்ச்சியின்பின், 1968ல் இவ்வைப்புக்கள் 192 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து, ஆண்டின் இறுதியில் மொத்தக் கேள்வி வைப்புக்களின் 9.4 சதவீதத்திற்கு வகைகூறின. இவ்வாண்டில் கேள்வி வைப்புக்கள் அதிகரித்துள்ளன. வியாபாரத் துறையின் இன்னுெரு பகுப்பு தயாரிப்பு நிறுவனங்களினதாகும். இத்தாபனங்களின் கேள்வி வைப்புக்கள் 157 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. மொத்த வைப்புக்களில் அவற்றின் பங்கு ஆண்டின் இறுதியில் 8.8 சதவீதத்தால் அதிகரித்தது.

ஏற்கெனவே கூறப்பட்ட வர்த்தகத் தாபனங்களின் கேள்வி வைப்புக்களிலேற்பட்ட வீழ்ச்சியைத்தவிர நிதித் தாபனங்களினதிலும் ஏனைய வியாபாரத் தாபனங்களினதிலும் வீழ்ச்சிகள் ஏற்பட்டன. வியாபாரமில்லாத் துறையில், தனியாட்களின் கேள்வி வைப்புக்களில் 92 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பும், வியாபாரமல்லாத் தாபனங்களில் 27 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பும் ஏற்பட்டன.

பொதுமக்களின் இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களில், வர்த்தக வங்கிகளுடனுன தவணைச் சேமிப்பு வைப்புக்கள் 1968ல் ஆகக் கூடிய அதிகரிப்பைக் காட்டின. 1967ற்குரிய 284 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், சேமிப்பு வைப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு 479 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. தவணை வைப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு 768 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, முந்திய ஆண்டிலும்பார்க்க ஓரளவு கூடியதாகக் காணப்பட்டது. அண்மையாண்டுகளில் பொதுமக்கள் வசமிருந்த இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் அதிகரித்த சேர்க்கையினை, பணநிரம்பலுக்கு வர்த்தக வங்கிகள் வசமிருந்த தவணை சேமிப்பு வைப்புக்கள் வகித்த விகித மாற்றத்தினுல் எடுத்துக் காட்டலாம். 1962—1965 காலப்பகுதியில் இவ்விகிதமானது ஒவ்வோராண்டும் 1 சதவீதப் புள்ளியால் 1962இல் இரிந்து 30 சதவீதத்திலிருந்து 1965இல் 33 சதவீதத்துக்கு அதிகரித்தது. அடுத்த மூன்று ஆண்டுகளிலும் தவணை சேமிப்பு வைப்புக்களின் வளர்ச்சி துரிதமாக அதிகரித்து, அதன் விகிதம் 1966இல் 35 சதவீதத்துக்கும், 1967இல் 38 சதவீதத்துக்கும், 1968இல் 42 சதவீதத்துக்கும் அதிகரித்தது.

ஏறக்குறைய சகல உடைமையாளர் பகுப்பின் தவணை வைப்புக்களிலும் அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. வர்த்தகத் தாபனங்களின் தவணை வைப்புக்கள் 309 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இது அவைகளின் கேள்வி வைப்புக்களிலேற்பட்ட வீழ்ச்சியை மேலதிகமாக ஈடுசெய்தது. இந்தப் பகுப்பின் தவணை வைப்புக்களின் அதிகரிப்பு, முழுவதும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினுடையதாக இருக்கையில், தனியார் வர்த்தகத்தொழில் நிலையங்களினது வைப்புக்கள் வீழ்ச்சியுற்றன. 1968ல் நிதித் தாபனங்கள் தங்கள் கேள்வி வைப்புக்கள் உடைமைகளை 213 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இந்த அதிகரிப்பின் பெரும்பகுதி தனியார் சேம, இளைப்பாறற் சம்பள நிதிகளால் தவணை வைப்புக்களிற் செய்யப்பட்ட முதலீட்டத்தினுல் ஏற்பட்டதாகும். பெருந்தோட்டங்கள், தயாரிப்பு நிறுவனங்கள் ஏனைய வியாபாரத் தாபனங்கள் ஆகியவற்றின் தவணை வைப்புக்களிற் சிறிய அதிகரிப்புக்கள் ஏற்பட்டன.

வியாபாரமல்லாத் துறையில், உள்ளூர் ஆட்சிச் சபைகளினதும் வியாபாரமல்லாத் தாபனங்களினதும் கேள்வி வைப்புக்களில் முறையே 59 இலட்சம் ரூபாய்களும் 73 இலட்சம் ரூபாய்களும் கொண்ட வீழ்ச்சிகள் ஏற்பட்டன. மறுபக்கம், தனியாட்களின் தவணை வைப்புக்கள், 1967ன் 85 இலட்சம் ரூபாய்கள் மட்டும்கொண்ட அதிகரிப்பைத் தொடர்ந்து, 1968ல் 235 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தன.

## அட்டவணை II (ஈ) 6

### வர்த்தக வங்கிகளிடமுள்ள கேள்வி, தவணை, சேமிப்பு வைப்புக்களின் உடைமையாளர்கள் (காலமுடிவில் உள்ளபடி)

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தெகை | % | தொகை | % | தொகை | % | தொகை | % |
| **நிதி நிலையங்கள் :** | | | | | | | | |
| 1967 திசெம்பர் ... | 53.2 | 6.7 | 69.4 | 17.8 | 12.1 | 4.4 | 134.6 | 9.2 |
| 1968 யூன் ... | 49.3 | 6.3 | 87.8 | 18.7 | 11.1 | 3.8 | 148.1 | 9.6 |
| 1968 திசெம்பர் ... | 47.9 | 6.0 | 90.7 | 19.6 | 12.1 | 3.8 | 150.7 | 9.5 |
| **பெருந்தோட்டங்கள் :** | | | | | | | | |
| 1967 திசெம்பர் .. | 55.9 | 7.0 | 34.3 | 8.8 | 0.2 | 0.1 | 90.4 | 6.2 |
| 1968 யூன் ... | 68.8 | 8.9 | 32.9 | 7.0 | 0.3 | ... | 102.1 | 6.6 |
| 1968 திசெம்பர் ... | 75.1 | 9.4 | 35.8 | 7.8 | 0.3 | 0.1 | 111.2 | 7.0 |
| **வர்த்தகம் :** | | | | | | | | |
| 1967 திசெம்பர் ... | 159.3 | 20.0 | 76.1 | 19.5 | 3.8 | 1.4 | 239.2 | 16.4 |
| 1968 யூன் ... | 151.2 | 19.5 | 116.6 | 24.8 | 4.2 | 1.4 | 272.1 | 17.7 |
| 1968 திசெம்பர் ... | 137.1 | 17.2 | 107.0 | 23.2 | 4.2 | 1.3 | 248.3 | 15.7 |
| **தயாரிப்புத் தாபனங்கள்:** | | | | | | | | |
| 1967 திசெம்பர் ... | 54.6 | 6.9 | 24.8 | 6.4 | 0.2 | 0.1 | 79.6 | 5.5 |
| 1968 யூன் ... | 63.0 | 8.1 | 30.2 | 6.4 | 0.5 | 0.2 | 93.6 | 6.1 |
| 1968 திசெம்பர் ... | 70.3 | 8.8 | 27.0 | 5.8 | 0.4 | 0.1 | 97.7 | 6.2 |
| **ஏனைய வியாபாரம் :** | | | | | | | | |
| 1967 திசெம்பர் ... | 101.1 | 12.7 | 29.7 | 7.6 | 3.0 | 1.1 | 133.8 | 9.2 |
| 1968 யூன் ... | 87.4 | 11.2 | 45.1 | 9.6 | 3.4 | 1.2 | 136.0 | 8.8 |
| 1968 திசெம்பர் ... | 89.9 | 11.3 | 35.2 | 7.6 | 2.6 | 0.8 | 127.7 | 8.1 |
| **உள்ளூர் ஆட்கள் சபைகள்** | | | | | | | | |
| 1967 திசெம்பர் .. | 23.8 | 3.0 | 20.6 | 5.3 | 0.3 | 0.1 | 44.8 | 3.1 |
| 1968 யூன் ... | 15.6 | 2.0 | 16.6 | 3.5 | 0.5 | 0.2 | 32.7 | 2.1 |
| 1968 திசெம்பர் .. | 19.0 | 2.4 | 14.7 | 3.2 | 0.6 | 0.2 | 34.3 | 2.2 |
| **வியாபாரத் தொடர்பற்ற நிலையங்கள் :** | | | | | | | | |
| 1967 திசெம்பர் .. | 43.7 | 5.5 | 37.9 | 9.7 | 4 5 | 1.6 | 86.1 | 5.9 |
| 1968 யூன் ... | 42.1 | 5.4 | 35.3 | 7.5 | 4.6 | 1.6 | 81.9 | 5.3 |
| 1968 திசெம்பர் ... | 46.4 | 5.8 | 30.6 | 6.6 | 5.7 | 1.8 | 82.8 | 5.2 |
| **தனியாட்கள் :** | | | | | | | | |
| 1967 திசெம்பர் ... | 303.5 | 38.2 | 97.1 | 24.9 | 248.1 | 91.1 | 648.7 | 44.5 |
| 1968 யூன் ... | 298.9 | 38.5 | 105.0 | 22.4 | 268.7 | 91.6 | 672.6 | 43.7 |
| 1968 திசெம்பர் ... | 312.7 | 39.2 | 120.6 | 26.1 | 294.0 | 91.9 | 727.3 | 46.0 |
| **மொத்தம் :** | | | | | | | | |
| 1967 திசெம்பர் ... | 795.1 | 100.0 | 389.8 | 100.0 | 272.2 | 100.0 | 1457.2 | 100.0 |
| 1968 யூன் ... | 776.3 | 100.0 | 469.6 | 100.0 | 293.3 | 100.0 | 1539.2 | 100.0 |
| 1968 திசெம்பர் ... | 798.4 | 100.0 | 461.7 | 100.0 | 319.9 | 100.0 | 1580.1 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

தனியாட்கள் துறை தனது தவணை வைப்பு உடைமைகளை மட்டு மன்றி, வர்த்தக வங்கிகளுடனுன தனது சேமிப்பு வைப்பு உடைமைகளையும் அதிகரித்தது. 1968ல் வர்த்தக வங்கிகளுடனுன தனியாட்களின் சேமிப்பு வைப்புக்கள் 459 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இது, வர்த்தக வங்கிகளுடனுன சேமிப்பு வைப்புக்களின் ஏறக்குறைய முழுமையான அதி கரிப்புக்கும் வகைகூறிற்று.

கடந்த ஈராண்டுகளில், வர்த்தக வங்கிகளுடனுன தவணை சேமிப்புக் களிலேற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள், பண வருவாய்களின் அதி கரிப்பையொட்டி, தனியார் துறையின் நிதி வளங்களை ஒன்று திரட்டுவ தற்குக் கிடைக்கக்கூடிய பெரும் வாய்ப்பைச் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வைப்புக்களின்மீது கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டிவிகிதங்களும், 1967லும் 1968லும் அதிகரித்தன. இது, நடைமுறை வருவாயிலிருந்து அதிகமாகச் சேமிப்பதற்கு எவ்வளவு தூரம் தூண்டுதலாக அமைந்தது எனக் கூறுவது கடினமாகும். ஆனுல், கேள்வி வைப்புக்களையும், ஏனைய நிதிச் சொத்துக்களையும் தவணை வைப்புக்களாக மாற்றுவதற்கு இது தூண்டுதலாக அமைந்திருக்கலாம். 1966ற் புகுத்தப்பட்ட சில குறிப்பிட்ட வரிச் சலு கைகள், 1968/69 வரவுசெலவுத் திட்டத்திஞல் அகற்றப்பட்டன. ஆனுல், இது 1968 ஓகத்திலிருந்தே செயல்முறைக்கு வந்தது. தனியாட்களின் தவணை சேமிப்பு வைப்புக்களில், விரிவு ஏற்பட்டுள்ளமையும், கிராமியப் பகுதி களிற் பண வருமானங்கள் குறிப்பிடத்தக்கதாக அதிகரித்துள்ளமை, அவ்விரி விற்குத் துணைசெய்தமையும் குறிப்பிடத்தக்கனவாகும். இளைப்பாறற் சம் பள, சேம நிதிகளும், தவணை வைப்புக்களில் முதலீடுசெய்வதில் அதி விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

வர்த்தக வங்கிகளுடனுன தவணைச் சேமிப்பு வைப்புக்களின் உடைமை அமைப்பிலே தனியாட்களினதும், சேமநிதிகள்போன்ற சேமிப்புத் தாபனங் களினதும் வளர்ந்துவரும் முக்கியத்துவம், 1968ல் இவ்வைப்புக்களின் பெரும் நிலையான நன்மைக்கு ஓரளவு காரணமாக அமைந்தது. இவ்வாண்டில் இவ்வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு ஏறக்குறைய படிப்படியாக அமைந்து, குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கத்திற்கு உட்படாமல் இருந்தது. தவணை வைப் புக்களின் சராசரி மாதாந்த மட்டம், 1967ல் 3,834 இலட்சம் ரூபாய்களி லிருந்து, 1968ல் 4,888 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. சேமிப்பு வைப்புக்களின் சராசரி மாதாந்த மட்டம் 2,502 இலட்சம் ரூபாய்களி லிருந்து 2,943 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. 1968ல் இவ்வைப்புக் களின் சுழல்வுவீதங்கள் சிறிய மாற்றங்களையே காட்டின. சேமிப்பு வைப்புக் களின் சுழல்வுவீதம் 1967ல் 0.08லிருந்து 1968ல் 0.09ற்கு சிறிய அள வால் அதிகரித்திருக்கையில், தவணை வைப்புக்களின் சுழல்வுவீதம் 0.21லிருந்து 0.20க்கு வீழ்ச்சியுற்றது.

கடந்த ஆண்டின் மந்தமான நிலைக்குப் பின்னர் 1968ல், தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியுடனும், இலங்கைச் சேமிப்பு வங்கியுடனுமான வைப்புக் களும் உற்சாகமூட்டுமளவு அதிகரிப்பைக் காட்டின. தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியுடனுன புதிய வைப்புக்கள் 1,178 இலட்சம் ரூபாய்களாக அமைந்தன. இது, 1966ம், 1967ம் ஆண்டுகளின் வைப்புக்களிலும் கிட்டத்தட்ட 120 இலட்சம் ரூபாய்கள் அதிகமாகும். 1,055 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய எடுப்பனவுகள், ஏறக்குறைய கடந்த ஈராண்டுகளின் மட்டத்திலேயே இருந் தன. எனவே, அவைகளின் சுழல்வுவீதம் சிறிதளவு வீழ்ச்சியுற்றது. தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியுடனுன வைப்புக்களின் அதிகரிப்புக்கு, கிராமிய வருவாய்களிலேற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்தது. கிராம வங்கிகளாகப் பணியாற்றும் கூட்டுறவுச் சங்கங்களுடனுன வைப்புக்களின் தொடர்பான அதிகரிப்பைப்பற்றி வேறிடத்திற் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

தனியார் துறையிலுள்ள சேமிப்புப் பத்திரங்களின் பெறுமதி, கடந்த ஆண்டின் 222 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1968ல் 126 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. 1968ல் ஏற்பட்ட இச்

சிறிய அதிகரிப்பு, ஓகத்தில், 1968/1969ற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவித்தபடி விரி நிவாரணம் அகற்றப்பட்டதால், ஏற்பட்ட தாகும். இந்த அதிகரிப்பு ஆண்டின் முதல் ஏழு மாதங்களிலேயே ஏறக் குறைய முழுமையாக ஏற்பட்டது.

வங்கியல்லாத் தனியார் துறையின் உடைமையிலிருந்த அரசாங்க முறிகள் 1968ல் 913 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. கடந்த ஆண்டு களைப் போலவே, இந்த அதிகரிப்பின் பெரும் பகுதிக்குக் காப்புறுதிக் கூட்டுத் தாபனமே காரணமாகும். இக் கூட்டுத்தாபனத்தின் உடைமைகளிலிருந்த அரசாங்கப் பிணைகள் 481 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. நம்பிக்கைச் சொத்து, உபகாரச் சம்பள, இளைப்பாறற் சம்பள, சேமநிதிகளின் (ஊழியர் சேமநிதி தவிர்த்து) உடைமைகள் 364 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், காப்புறுதிக் கூட்டுநிலையங்களின் உடைமைகள் 38 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. தனியாட்கள் வசமுள்ள அரசாங்கப் பிணைகள் 20 இலட்சம் ரூபாய்களால் மாத்திரமே அதிகரித்தன. வங்கியல்லாத் தனியார் துறையின் வசமுள்ள மொத்த அரசாங்கப் பிணைகள் 4.8 சதவீதத்திற்கு வகைகூறின. எனவே, அரசாங்க முறிகளின் உடைமை அமைப்பிலே தாபன உடைமையாளர்கள் முக்கிய அம்சமாகத் தொடர்ந்து விளங்கின.

தனியார் துறையின் திரவ இருப்புச் சொத்துக்களின் வளர்ச்சியினதும், அமைப்பினதும் முக்கிய அம்சங்களை இப்பொழுது சுருக்கிக் கூறலாம். அண்மை ஆண்டுகளில், பொதுமக்களின் முதன்மையான, இரண்டாந்தரமான திரவச் சொத்துக்களில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதில் முன்னையதிலும்பார்க்கப் பின்னையது விரைவான அதிகரிப்புப் போக்கு உள்ளதாக இருக்கிறது. இரண்டாந்தரத் திரவச் சொத்துக்களின் அமைப்பிலேற்பட்ட மாற்றங்கள், பொதுமக்களைத் தமது கோரிக்கைகளை அரசாங்கத்தின்மீதல்லாது, வங்கிகள்மீது வைத்திருக்க முந்துரிமை கொண்டுள்ளமையை நிரூபிக்கின்றது. அரசாங்கத்தின்மீதான கோரிக்கைகளிலேற்பட்ட சிறிய அதிகரிப்பு, பிரதானமாக, அரசாங்க முறிகள், அவற்றின்மீதுள்ள கட்டுமட்டான கேள்வி அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. இக்கேள்வியானது, திரவச் சொத்துக்களிற் சில ஆவணங்களை வைத்திருக்க வேண்டிய நிறுவன முதலீட்டினர்களுக்கும், அல்லது அரசாங்கப் பிணைகளில் தமது மிகை நிதிகளை நிதியீட்டம் செய்யவேண்டிய சட்ட வரையறுப்புடைய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்றவற்றிற்கும் மட்டும் அமைந்ததாகும். மக்கள் வசமுள்ள சகல நிதி இருப்புச் சொத்துக்களையும் ஒன்றுசேர்த்து நோக்குமிடத்து அபிவிருத்தியடையும் பொருளாதாரங்களுக்குப் பொதுவான பண்பொன்று அமைந்திருப்பதைப் பார்க்கலாம்; அதாவது, பொருளாதாரம் அபிவிருத்தியடைவதைத் தொடர்ந்து தேசீய வருமானத்தில் நிதி இருப்புச் சொத்துக்கள் வகிக்கும் விகிதம் படிப்படியாக வளர்ந்து செல்கின்றது.

## 1 (ஈ) வட்டிவீதங்கள்

1968ம் ஆண்டில் வட்டிவீதங்களிற் பொதுவான அதிகரிப்புக் காணப்பட்டது. இவ்வாண்டு மே மாதம் 6ந் தேதி மத்திய வங்கியின் வட்டிவீதம், 5%லிருந்து 5½% ஆக ஏற்றப்பட்டது. நவெம்பர் மாதத்தில் நடுத்தரக் கால நீண்டகாலக் கொடுகடன் நிதியின்கீழான மீள-நிதியிடல் வசதிகளைக் கையாளும் கொடுகடன் நிலையங்களுக்கு மத்திய வங்கியின் வட்டிவீதமும் ஏற்றப்பட்டது. மேலும், விவசாயம், தொழிற்றுறைப் பகுதிகளின் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்குமாகக் கொடுக்கப்பட்ட கடன்களுக்கு மத்திய வங்கி வட்டி 3%இலிருந்து 4% ஆக உயர்த்தப்பட்டது. இவ்வாறே வாணிபம் வர்த்தகங்களின் அபிவிருத்திக்கும் ஊக்குவித்தலுக்குமான கடன்களுக்குரிய வட்டி 5%லிருந்து 5½%ற்கு ஏற்றப்பட்டது. தேயிலைத் தொழிற்சாலைகளை ஆக்குவதற்கோ, புதுப்பிப்பதற்கோ எடுக்கப்பட்ட கடன்களுக்கு எதிரான மீள நிதியீட்டங்களின் உள்ளூர்ச் செலவு சம்பந்தமானவைக்கு 5 சதவீத வட்டியும், அந்நிய செலாணிச் செலவுக்கு 7 சதவீத வட்டியும் நியமிக்கப்பட்டது. விவசாயக் கொடுகடன் திட்டத்தின்கீழான மத்திய வங்கியின் மீள நிதியீட்டங்களுக்கு வட்டி 1½% ஆக மாற்றம் எதுவுமின்றி இருக்கலாயிற்று.

மத்திய வங்கியின் வட்டிவீதம் ஏற்றமுற்றதைத் தொடர்ந்து, வர்த்தக வங்கிகளினது வட்டிவீதங்களும், மே மாதத்திற் ஏற்றமுற்றன. இவ்வாறே அரசாங்கக் கடன் ஆவணங்களை ஆதாரமாகக் கொண்ட கடன்களின் மிகக் குறைவான வட்டிவீதம், 5½%லிருந்து 5¾% இற்கும், அவற்றின் மிகக் கூடியதான வட்டி 8%லிருந்து 8½%ற்கும் உயர்வுற்றன. கொம்பனிகளின் பங்கு முறிகளை அடமானமாகக் கொண்ட கடன்களுக்கான மிகக் குறைவான வட்டிவீதம் மாற்றத்திற்குள்ளாகவில்லையாயினும், இவற்றின் மிகக்கூடிய வட்டிநிலை 9%லிருந்து 9½%ற்கு உயர்வுற்றது. வியாபாரக் கையிருப்புச் சொத்துக்களை அடமானமாகக் கொண்ட கடன்களுக்கு மிகக் குறைந்த வட்டிநிலை 6% இருந்து 7% ஆகவும், மிகக்கூடிய வட்டிநிலை 9% இலிருந்து 9½% ஆகவும் உயர்வுற்றன. அசைவற்ற சொத்துக்களை ஈடாகக் கொண்ட கடன்களுக்கு மிகக் குறைந்த வட்டி 6½%லிருந்து 7%ற்கு உயர்வுற்றிருக்கையில், அவற்றின் மிகக் கூடிய வட்டி மாற்றமுறாது 9½% இலேயே நின்றது. ஏனைய வகையானவற்றை அடமானமாகக் கொண்ட கடன்களுக்கு மிகக் குறைந்த வட்டி 5%லிருந்து 5½%ற்கும் மிகக் கூடிய வட்டி 10%லிருந்து 11% ஆகவும் மாற்றமடைந்தன. அடமானம் இல்லாத கடன்களுக்கு மிகக் குறைந்த வட்டிநிலை மாற்றமடையாது 7%இல் நின்றது. ஆனல், இவற்றின் மிகக் கூடிய வட்டிநிலை 9%லிருந்து 10%ற்கு எழுந்தது.

அநேகமான வங்கிகள் ரூபா 25,000ற்கு உட்பட்ட 12 மாத காலத் தவணையுடைய நிலையான வைப்புக்களுக்குக் கொடுக்கும் வட்டியை ½ சதவீதத் தாற் கூட்டிக்கொடுத்தன. எனவே, மே மாதத்தின்பின்னர் அவற்றின் மீதான வட்டி 3 3/4% வீதமாக நிலவிற்று. இந்த ஆண்டில் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட 48 மாதத் தவணையுடைய நிலையான வைப்புக்களுக்கான வட்டி 3¼ சதவீதத்தால் ஏறிற்று. எனவே, திசெம்பர் முடிவில் இவற்றின் மிகக்கூடிய வட்டி 4¼% ஆயிருந்தது. யூலை மாதம் சேமிப்பு வைப்புக்களுக்கு வர்த்தக வங்கிகள் கொடுக்கும் மிகக் கூடியபட்ச வட்டி 3%லிருந்து 3½%ற்கு உயர்த்தப்பட்டது. இவற்றின் மிகக் குறைந்த வட்டிநிலை மாற்றமுறாது 3%ல் நின்றது.

திசெம்பர் 1967ல் 3.20%இல் நின்ற திறைசேரி உண்டியல் வட்டி வீதம், 1968ம் ஆண்டு மாச்சு மாதம் 3.24%ஆல் ஏறி, இவ்வாண்டின் யூன் மாதத்தில் 3.54%ற்கு உயர்வுற்றது. யூலை — திசெம்பர் மாதங்களிடையே அது நிலைவரமான 3.64 சதவீத்தில் நிற்கலாயிற்று.

மே மாதத்தில் 20 ஆண்டுகளுக்கு அப்பால் முற்றுகும் அரசாங்கக் கடன் ஆவணங்களின் வட்டிவீதம் 4½%லிருந்து 5½%ற்கு உயர்த்தப்பட்டது. இது 1963ம் ஆண்டு யூன் மாதத்தின்பின் ஏற்பட்ட முதன்முதலான அதிகரிப்பாகும்.

**2. (அ) வர்த்தக வங்கித் தொழில் — பிரதான தன்மைகள்**

கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டிலும் பொதுமக்களின் வைப்புக்கள் அதிகரித்ததன் பயனுக வர்த்தக வங்கிகளின் பொருள்வளங்கள் அதிகரித்தன. எனவே, மத்திய வங்கியிடமிருந்து கடன் பெற வேண்டிய தேவை குறைவுற்றது.

வர்த்தக வங்கிகள் கிளைத்தாபனங்களை ஆரம்பிக்கும் செயல்கள் குறைவுற்றும், வைப்புக்களைத் திரட்டுவதற்காகச் செறிந்த முனைவுகள் காணப்படாமலும் இருந்தபொழுது, வர்த்தக வங்கிகளுடனுன வைப்புக்கள் அதிகரித்தமை மிகக் குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆயினும், வட்டிவீதங்களிற் சில அதிகரிப்புக்கள் ஏற்பட்டமை நிலையான வைப்புக்களினதும், சேமிப்பு வைப்புக்களினதும் அதிகரிப்பிற்கு ஊக்கக் காரணிகளாக இருந்திருக்கக்கூடும். வைப்புக்களின் அதிகரிப்பானது வருமானங்களின் அதிகரிப்பினுலும், கடந்த ஆண்டுகளின் ஒன்றுசேர்ந்த நாணய விரிவினுலும் ஏற்பட்டிருக்கக்கூடுமெனவும் கூறலாம்.

வர்த்தக வங்கிக் கொடுகடன்களான கேள்வி இவ்வாண்டின் முன்னரைப் பகுதியில் உயர்வுற்றிருந்ததுமன்றி பின்னரைப்பகுதியில் அது மேலும் அதிகரித்தது. வட்டிவீதங்கள் அதிகரித்தபோதிலும், கொடுகடன் தேவைகள் கணிசமானளவு அதிகரித்துள்ளமை காணப்பட்டது. வர்த்தக வங்கிகள் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தொழிற்படு மூலதனத் தேவைகளைக் கூடிய விகிதாச்சாரமாக நிதியீட்டினவெனவும், கைத்தொழில் விவசாயத்திற்கான நடுத்தர நீண்டகால நிதியீட்டல்களிலும் மிக ஈடுபட்டிருந்தன.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், வளங்களை உபயோகிப்பதில் வர்த்தக வங்கிகள், தமது கடன் கொடுத்தற்றொழிற்பாடுகளைத் தனியார் துறையுடன் அதிகரித்துக் கொண்டமையோடு, அரசாங்கத்துக்கான குறுந்தவணைக் கொடுகடன்களைக் குறைத்துக்கொண்டன. தனியார் துறைக்கான கொடுகடன் விரிவு 1968ல் ஓர் உச்ச மட்டத்தை அடைந்தது. இத்தொழிற்பாடுகளின்பயனாக வர்த்தக வங்கிகளின் திரவநிலை குன்றியபோதிலும், அவை இன்னமும் திருப்திகரமான உயர்ந்த மட்டத்திற் கொண்டுசெல்லப்பட்டன. இக்கூற்று மொத்த வைப்புக்களில் திரவச் சொத்துக்கள் வகித்த விகிதசமம் 38.3 சதவீதமாக இருந்தமையினாலே தேரப்படுகின்றது.

## 2. (ஆ) கிளையமைப்பு

1963-68 காலப்பகுதியில் இலங்கையர் வங்கிகளுக்கும் அந்நிய வங்கிகளுக்குமிடையில் உள்ள வங்கி அலுவலகங்களினதும் வைப்புக்களினதும் பகுப்பாய்வு அட்டவணை II (ஈ) 7இலே தரப்பட்டுள்ளது.

அட்டவணை II (ஈ) 7

வங்கி அலுவலகங்களினதும், வைப்புக்களினதும் பங்கீடு 1963—1968

| ஆண்டு | மொத்தம் | | | இலங்கை வங்கிகள் | | | பிரித்தானிய வங்கிகள் | | | இந்திய பாகிஸ்தானிய வங்கிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் தொகை ப. இ. ரூபா. | வைப்புக்கள் % | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் தொகை ப. இ. ரூபா. | வைப்புக்கள் % | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் தொகை ப. இ. ரூபா. | வைப்புக்கள் % | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் தொகை ப. இ. ரூபா. | வைப்புக்கள் % |
| 1963 | 83 | 1,301 | 100 | 67 | 801 | 61 | 12 | 412 | 32 | 4 | 88 | 7 |
| 1964 | 88 | 1,447 | 100 | 72 | 943 | 65 | 12 | 415 | 29 | 4 | 90 | 6 |
| 1965 | 97 | 1,546 | 100 | 81 | 1,023 | 66 | 12 | 431 | 28 | 4 | 92 | 6 |
| 1966 | 105 | 1,502 | 100 | 89 | 1,003 | 67 | 12 | 419 | 28 | 4 | 80 | 5 |
| 1967 | 133 | 1,637 | 100 | 117 | 1,157 | 71 | 12 | 404 | 25 | 4 | 76 | 5 |
| 1968 | 141 | 1,808 | 100 | 125 | 1,329 | 73 | 12 | 409 | 23 | 4 | 71 | 4 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இவ்வாண்டின்போது கிளை அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 8ஆல் அதிகரித்து, ஆண்டுமுடிவில் 141ஆக விளங்கியது. 8 புதிய அலுவலகங்களில் 7 அலுவலகங்கள் மக்கள் வங்கியினுலும், 1 அலுவலகம் இலங்கை வங்கியினுலும் ஆக்கப்பட்டன. புதிய கிளைகள் மட்டக்களப்பு, வென்னப்புவை, வெலிகமை, பொரளை, வியாங்கொடை, இரத்மலானை, றுவான்வலை, நுகேகொடை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன.

1968ல் திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை முந்திய ஆண்டிலும் பார்க்கக் குறைவாக இருந்தபோதிலும், வங்கி வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, ஓரளவு கூடியதாகும். வங்கி வைப்புக்கள் 1,714 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன; இவை முழுவதும் இலங்கையர் வங்கிகளிலேயே ஏற்பட்டன. வர்த்தக வங்கிகளுடனுன மொத்த வைப்புக்களில் இலங்கையர் வங்கிகளின் பங்கு 1967ற்குரிய 71 சதவீதத்திலிருந்து 1968 இறுதியில் 73 சதவீதத்திற்கு உயர்வுற்றது. புதிய வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல் இலங்கை வங்கியுடனும், மக்கள் வங்கியுடனும் அல்லாமல் வேறு வங்கிகளில் இருக்கக்கூடாதென்ற 1961ம் ஆண்டின் நிதிச் சட்டத்தின்படியான கட்டுப்பாடு இவ்வாண்டின்போதும் நடைமுறையில் இருந்தது. ஏனைய வங்கிகளில் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதியளிக்க நிதியமைச்சருக்கு அதிகாரம் வழங்கும் ஒரு திருத்தச் சட்டம் ஓகத்து மாதத்தில் நாடாளுமன்றத்தாற் கொண்டுவரப்பட்டதாயினும், இவ்வாண்டின் இறுதிவரை ஏனைய வங்கிகள் எதுவும் இதற்கு அனுமதிக்கப்படவில்லை. *

## 2. (இ) வங்கிப் பொறுப்புக்களின் அமைப்பு

1957-68 சம்பந்தமாக வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்களின் அமைப்பைப்பற்றிய சுருக்கத்தரவுகள் அட்டவணை II (ஈ) 8இற் கொடுக்கப்பட்டுள்ளன.

வர்த்தக வங்கிகளின் மொத்த இருப்புச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 1968ல் 2,198 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இரு முந்திய ஆண்டிலேற்பட்ட 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 10.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். பொறுப்புக்களின் பக்கத்தில் இவ்வதிகரிப்பானது பெரும்பாலும் வைப்புக்களின் அதிகரிப்பைக் குறிப்பதாகும். வர்த்தக வங்கிகளுடனுன மொத்த வைப்புக்கள் இவ்வாண்டின்போது 1,714 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. வர்த்தக வங்கிகள், மத்திய வங்கியிலிருந்து பெற்ற தமது கடன்பாடுகளை 128 இலட்சம் ரூபாய்களாற் குறைத்தன. உள்நாட்டிலுள்ள வங்கிகளிடையேயான கடன்பாடுகள், 44 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. எனினும், அந்நிய வங்கிகளுக்கான பொறுப்புக்கள் 71 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளின் மூலதனங்களும் ஒதுக்குகளும் 61 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், ஏனைய பொறுப்புக்கள் 524 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

வங்கிகளின் பொருள்வளங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு பிரதானமாக வைப்புக்களின் அதிகரிப்பினூடாகக் கிடைத்ததென்பதும், வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து கடன்பெறவேண்டிய தேவையைக் குறைத்ததென்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். வைப்புக்களின் அதிகரிப்புப் பெரும்பாலும் தனியார்துறையில் தவணை சேமிப்பு வைப்புக்களாகவிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வைப்புக்கள் மொத்த வைப்புக்களில் ஏற்பட்ட 1,714 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பில் 1,246 இலட்சம் ரூபாய்களுக்கு வகைகூறின. அரசாங்கத்துக்கான வைப்புப் பொறுப்புக்கள், பெரும்பாலும் கேள்வி வைப்புக்கள், 259 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

---

* 1969 பெப்புருவரி 28ஆந் தேதிய கசெற் அறிவித்தலின்படி சாற்றட் வங்கியும் ஈஸ்ரேண் வங்கியும் இந்நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளென பிரகடனம் செய்யப்பட்டது.

அட்டவணை II (ஈ) 8

## வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்களின் பங்கீடுகள்

(மாத எண்தொகைகளின் சராசரி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | கால முடிவில் 1967 திசெ. | கால முடிவில் 1968 திசெ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்புப் பணமும் (சட்டமுறையான ஒதுக்கும் உட்பட) மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் ... | 139 | 119 | 116 | 132 | 148 | 186 | 164 | 182 | 224 | 233 | 218 | 247 | 229 | 248 |
| அந்நிய நிலுவைகள் ... ... ... | 72 | 50 | 52 | 58 | 54 | 55 | 44 | 49 | 55 | 62 | 57 | 72 | 66 | 77 |
| இறைசேரி உண்டியல்கள் ... ... | 34 | 16 | 24 | 28 | 51 | 89 | 128 | 73 | 89 | 124 | 80 | 102 | 109 | 111 |
| கழிவுபட்ட உண்டியல்கள் ... ... | 100 | 116 | 119 | 115 | 122 | 136 | 114 | 126 | 173 | 175 | 198 | 252 | 289 | 225 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் ... ... | 345 | 301 | 311 | 333 | 375 | 466 | 450 | 430 | 541 | 594 | 553 | 673 | 693 | 661 |
| மொத்த முதலீடுகள் (1) ... ... | 308 | 296 | 285 | 284 | 290 | 303 | 313 | 330 | 329 | 330 | 300 | 278 | 270 | 278 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் ... | 340 | 363 | 395 | 430 | 435 | 477 | 495 | 633 | 669 | 682 | 809 | 1000 | 864 | 1,098 |
| கேள்வி வைப்புக்கள் (2) ... ... ... | 721 | 661 | 655 | 657 | 677 | 829 | 789 | 853 | 917 | 949 | 914 | 955 | 936 | 979 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் ... | 240 | 263 | 300 | 340 | 359 | 380 | 460 | 535 | 572 | 631 | 649 | 798 | 701 | 826 |
| மொத்த வைப்புக்கள் ... ... ... | 965 | 926 | 955 | 998 | 1,036 | 1,209 | 1,250 | 1,389 | 1,490 | 1,580 | 1,564 | 1,755 | 1,637 | 1,808 |
| விகிதம் ... ... ... ... | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் ... | 19.3 | 18.0 | 17.7 | 20.1 | 21.9 | 22.4 | 20.8 | 21.3 | 24.4 | 24.5 | 23.8 | 25.9 | 24.5 | 25.3 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் ... | 14.4 | 12.9 | 12.1 | 13.2 | 14.3 | 15.4 | 13.1 | 13.1 | 15.0 | 14.7 | 13.9 | 14.1 | 14.0 | 13.7 |
| ,, ,, அந்நிய நிலுவைகளின் விகிதம் .. | 7.4 | 5.4 | 5.4 | 5.8 | 5.2 | 4.5 | 3.5 | 3.5 | 3.7 | 3.9 | 3.6 | 4.1 | 4.0 | 4.3 |
| ,, ,, இறைசேரி உண்டியல்களின் விகிதம் ... | 3.5 | 1.7 | 2.5 | 2.8 | 4.9 | 7.4 | 10.2 | 5.3 | 6.0 | 7.8 | 5.1 | 5.8 | 6.7 | 6.1 |
| ,, ,, கழிவோடு மாற்றப்பட்ட வர்த்தக உ.வி. | 10.3 | 12.5 | 12.5 | 11.5 | 11.8 | 11.2 | 9.1 | 9.1 | 11.6 | 11.1 | 12.7 | 14.4 | 17.6 | 12.4 |
| கே. வைப்புக்களுக்குத் தி. சொத்துக்களின் விகிதம்.. | 47.9 | 45.5 | 47.5 | 50.7 | 55.4 | 56.2 | 57.0 | 50.4 | 59.0 | 62.6 | 60.5 | 70.5 | 74.0 | 67.5 |
| மொ. வைப்புக்களுக்குத் தி. சொத்துக்களின் விகிதம் | 35.8 | 32.5 | 32.6 | 33.4 | 36.2 | 38.5 | 36.0 | 31.0 | 36.3 | 37.6 | 35.4 | 38.3 | 42.3 | 36.6 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் ... | 31.7 | 32.0 | 29.8 | 28.5 | 28.0 | 25.1 | 25.0 | 23.8 | 22.1 | 20.9 | 19.2 | 15.8 | 16.5 | 15.4 |
| ,, ,, கடன்கள் மேலதிகப் பற்றுக்களின் வி. ... | 35.2 | 39.2 | 41.4 | 43.1 | 42.0 | 39.4 | 39.6 | 45.6 | 44.9 | 43.2 | 51.7 | 57.0 | 52.8 | 60.7 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(1) அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், மத்திய வங்கி வெளியீடுகளும்.

(2) உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

## அட்டவணை II (ஈ) 9

### வங்கிகளினது வளங்களின் வருடாந்த மாற்றங்களும், அவற்றின் பயன்பாடுகளும் 1965—1968

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1965 | 1966* | 1967* | 1968 |
|---|---|---|---|---|
| நிதிகளின் மூலங்கள் | | | | |
| 1. அரசாங்கத் துறை ... ... ... | **11.8** | **62.7** | **62.3** | **150.9** |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் குறைப்பு ... | — | 14.7 | 64.3 | — |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... ... | 11.8 | — | — | 25.9 |
| அரசாங்கத்துக்கான குறுந்தவணைக் கொ.க. வீழ்ச்சி | — | 48.0 | — | 125.0 |
| 2. மத்திய வங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகளின் அதிகரிப்பு ... ... ... | — | **36.4** | **59.3** | — |
| 3. உள்நாட்டுத் தனியார் துறை ... ... | **148.8** | **34.2** | **242.0** | **201.4** |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... ... | 85.0 | — | 153.4 | 142.9 |
| ஒதுக்குகள், செலவிறுத்த மூ. தனங்களின் அதிகரிப்பு | 9.1 | 16.0 | 7.3 | 6.1 |
| ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பு ... | 54.7 | 18.2 | 81.3 | 52.4 |
| 4. வெளிநாட்டுத் துறை ... ... ... | **11.5** | **0.7** | **1.0** | **7.3** |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு ... ... | 1.2 | 0.7 | — | 7.1 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... ... | 1.3 | — | 1.0 | 0.2 |
| வெளிநாட்டு மிச்சங்களின் குறைப்பு ... | 9.0 | — | — | — |
| 5. உள்நாட்டு பணவிடயங்களின் குறைப்பு ... | — | **40.1** | — | — |
| வளங்களின் மொத்த அதிகரிப்பு ... ... | 172.1 | 174.1 | 366.6 | 359.6 |
| நிதிகளின் பயன்பாடுகள் | | | | |
| 1. அரசாங்கத் துறை ... ... ... | **92.3** | **28.1** | **157.7** | **10.1** |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் அதிகரிப்பு ... | 32.8 | — | — | 10.1 |
| அரசாங்கத்துக்கான குறுந்தவணை கொ.க.அதிகரிப்பு | 59.5 | — | 139.5 | — |
| வைப்புக்களின் மீட்பு ... ... ... | — | 28.1 | 18.2 | — |
| 2. ம.வ.யிடமிருந்து பெற்ற கடன்பாடுகளின் குறைவு | **12.8** | — | — | **12.8** |
| 3. உள்நாட்டுத் தனியார் துறை ... ... | **47.9** | **129.3** | **164.5** | **308.6** |
| முற்பணங்களின் அதிகரிப்பு ... ... | 4.2 | 92.1 | 104.8 | 291.0 |
| ஏனைய இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு ... | 43.7 | 22.1 | 57.9 | 17.6 |
| தனியார் பிணைகளின் அதிகரிப்பு ... ... | — | — | 1.8 | — |
| வைப்புக்களின் மீட்பு ... ... ... | — | 15.1 | — | — |
| 4. வெளிநாட்டுத் துறை ... ... ... | — | **17.0** | **7.3** | **10.6** |
| கடன்பாடுகளின் குறைவு ... ... | — | — | 0.9 | — |
| வைப்புக்களின் மீட்பு ... ... ... | — | 1.6 | — | — |
| வெளிநாட்டு மிச்சங்களின் அதிகரிப்பு ... | — | 15.4 | 6.4 | 10.6 |
| 5. உள்நாட்டுப் பணவிடயங்களின் அதிகரிப்பு ... | **18.7** | — | **36.2** | **19.5** |
| நிதிவளங்களினது பயன்பாட்டின் மொ. அதிகரிப்பு | 171.7 | 174.4 | 365.7 | 361.6 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* இவ்வெண்தொகைகளுக்கும் முந்திய ஆண்டறிக்கைகளில் வெளியிடப்பட்ட தொடர்பான எண்தொகைகளுக்குமிடையிலுள்ள வேறுபாடுகள், திருத்தங்களினாலாகும்.

## 2. (ஈ) வங்கி இருப்புச் சொத்துக்களின் அமைப்பு

1968ம் ஆண்டில் வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்களிலேற்பட்ட அதிகரிப்போடுசேர்ந்து, அவற்றின் அமைப்பில் ஏற்பட்ட மாற்றமும் குறைந்த திரவநிலையான சொத்துக்களை நோக்கியே சென்றன. கடன்களும், மேலதிகப் பற்றுக்களும் ஏறக்குறைய மொத்த இருப்புச் சொத்துக்களிலேற்பட்ட அதிகரிப்பிற்குச் சமமான அளவில் அதிகரித்துள்ளன. வர்த்தக வங்கிகளின் பணநிலை ஓரளவு திருத்தமுற்றது. மொத்தப் பண உடைமைகள் (சட்டமுறையான ஒதுக்குகளும் உட்பட) 195 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. மொத்த வைப்புக்களில், பண இருப்புக்கள் வகித்த விகிதசமம் 1967ன் இறுதிக்குரிய 24.5 சதவீதத்திலிருந்து 1968 இறுதியில் 25.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஏனைய திரவச் சொத்துக்கள் இதிலும் கூடிய அளவால் வீழ்ச்சியுற்றன. இறக்குமதி உண்டியல்கள் 912 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இது, வங்கிகளின் உடைமைகளான அரசாங்க இறக்குமதி உண்டியல்களிலேற்பட்ட 1,250 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியினதும், தனியார் துறை அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் உண்டியல்களில் முறையே ஏற்பட்ட 184 இலட்சம் ரூபாய்கள், 154 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புக்களினதும் தேறிய விளைவாகும். ஏற்றுமதி உண்டியல்கள் 268 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

திரவச் சொத்துக்கள் வீழ்ச்சியுற்றமையினால், மொத்த வைப்புக்களில் திரவச் சொத்துக்கள் வகித்த விகிதசமம் 1967ன் இறுதிக்குரிய 42.3 சதவீதத்திலிருந்து 1968 இறுதியில் 36.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. எனினும், ஆண்டின் பெரும்பகுதியான காலத்தின்போது இறக்குமதி உண்டியல்கள் உயர்ந்த மட்டத்தில் இருந்து, இறுதி நாலு மாதங்களில் மட்டுந்தான் வீழ்ச்சியுற்றமையினால், மொத்த வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் சராசரி விகிதசமம் 1967ம் ஆண்டிலும்பார்க்க உயர்வானதாகும். மொத்த வைப்புக்களுக்குக் கடன்களும், மேலதிகப் பற்றுக்களும் வகித்த விகிதசமம் மாதாந்தச் சராசரியின்படியும், ஆண்டு இறுதி நிலையின்படியும் அதிகரிப்பைப் பதிவுசெய்தன. சராசரியாக நோக்குமிடத்து, இந்த விகிதசமம் 1967லும்பார்க்க 6 சதவீதப் புள்ளிகள் உயர்வாகவுள்ளது. 1968ன் இறுதியில் இது, 60.7 சதவீதமாக இருந்தமை இதுவரை எவ்வாண்டு இறுதியிலும் பதிவுசெய்யப்பட்ட மிகவுயர்ந்த மட்டமாகும்.

## 2. (உ) நிதிகளின் மூலங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

தனியார் துறை வைப்புக்களின் அதிகரிப்பை அடிப்படைப் பொருள்வளங்களாகக் கொண்டு தனியார் துறைக்கு இயற்றுவிக்கக்கூடிய கொடுகடன் ஆக்கத்திலும்பார்க்க மிக மேலதிகமான கொடுகடன் ஆக்கம் செய்யத்தக்க முறையில் வர்த்தக வங்கிகளுடன் அரசாங்கத் துறையினது கொடுக்கல்வாங்கல்கள் முந்திய ஆண்டிற்கெதிர்மாறாக 1968ம் ஆண்டில் அதிகரித்தன. எனவே, 1967ம் ஆண்டில் தனியார் துறை வைப்புக்களின் சேர்க்கையிலிருந்து எழும் வங்கி மூலங்களின் அதிகரிப்பு அரசாங்கத்திற்கு அதிகரித்த குறுகிய காலக் கடனளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கையில், 1968ம் ஆண்டில், தனியார் துறையின் வைப்புக்களின் அதிகரிப்பினாலும், வர்த்தக வங்கிகளுடனுள்ள அரசாங்கக் கடன்பாடுகளின் குறைப்புக்களினாலும் அதிகரித்ததான வங்கி மூலங்களின் பெரும்பாகத்தைத் தனியார் துறை பயன்படுத்தியுள்ளது. அத்துடன், முந்திய ஆண்டிற்கு எதிர்மாறாக, வர்த்தக வங்கிகள், பொருள்வளங்களுக்காக மத்திய வங்கியிடமிருந்து கடன்பாட்டை நாடவில்லை. உண்மையில் வங்கிகள், 1968ம் ஆண்டில் அதிகரித்த தமது பொருள்வளங்களின் பகுதியை, மத்திய வங்கியிடமிருந்துபெற்ற தம் கடன்பாடுகளைக் குறைப்பதற்கு உபயோகிக்கக்கூடிய நிலையில் இருந்தன.

அரசாங்கத்திற்குள்ள குறுகியகாலக் கடன் குறைப்பனவால் வெளியிடப்பட்ட வங்கிகளின் பொருள்வளங்கள் ரூபா 1,250 இலட்சம் தொகையைக் கொண்டதாகும். இது முந்திய ஆண்டிற் கூடுதலாக ஒருமிக்கப்பட்டதான, அரசாங்க இறக்குமதி உண்டியல்களின் மீளக்கொடுப்பனவைப் பிரதிபலிப்பது. இவற்றுடன், இத்துறையில் எழுந்த பொருள்வளங்களின் ரூபா 259

இலட்சம் கொண்ட அதிகரிப்பானது, அரசாங்க வைப்புக்களின் அதிகரிப்பின் விளைவால், 1968ம் ஆண்டு வர்த்தக வங்கிகளுக்குக் கிடைக்கக்கூடியதாயிருந்தது. இது 1965ம் ஆண்டிற்குப்பின் வர்த்தக வங்கிகளுடனுன அரசாங்க வைப்புக்களின் முதல்முறையேற்பட்ட ஆண்டு அதிகரிப்பாகும். அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள், திறைசேரி உண்டியல்கள் ஆகிய வர்த்தக வங்கிகளின் உடைமைகளிலேற்பட்ட ரூபா 101 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, 1968ம் ஆண்டில் அரசாங்கத் துறைக்கு ஏற்புடைத்த வர்த்தக வங்கிகளின் பொருள்வளங்களின் பயன்பாடுகளை மட்டுமே பிரதிபலிக்கிறது.

உள்ளூர்த் தனியார் துறையினுல் மட்டும், 1968ம் ஆண்டில் ஆக்கப்பட்ட புதிய வளங்கள் ரூபா 2,014 இலட்சம் தொகையைக் கொண்டதுடன், வர்த்தக வங்கிகளுடனுள்ள வைப்புக்களையே பிரதானமாக இவை கொண்டிருந்தன. ரூபா 1,429 இலட்சத்தால் அதிகரித்த இவ்வைப்புக்கள், முந்திய ஆண்டிலும் ஒரு சிறிதளவு மட்டுமே குறைந்ததாகும். 'வர்த்தக வங்கிகளின் மூலதனம், ஒதுக்குகள் என்பவற்றிலும் ரூபா 61 இலட்சம் கொண்ட அதிகரிப்பு இருந்து, வர்த்தக வங்கிகளின் 'ஏனைய' பொறுப்புக்களிலும் ரூபா 524 இலட்சம் கொண்ட மேலுமோர் அதிகரிப்பு ஏற்பட்டது.

1968ம் ஆண்டில் தனியார் துறையிலான உபயோகிக்கப்பட்ட ரூபா 3,086 இலட்சம் கொண்ட வர்த்தக வங்கி வளங்களின் முந்திய ஆண்டுகளிலும்பார்க்க மிகக் கூடியதாகும். வங்கி மூலங்களின் இப்பயன்பாடு, ரூபா 2,910 இலட்சம் கொண்ட முற்பணங்களின் அதிகரிப்பு வடிவையே பிரதானமாகக் கொண்டதாகும். இத்தொகை 1967ம் ஆண்டிலும்பார்க்க இரண்டு மடங்கிற்கு மேலாகவும் 1966ம் ஆண்டிலும்பார்க்க மூன்றுமடங்கு மேலாகவும் உள்ளது.

வர்த்தக வங்கி வளங்களுக்கு அந்நிய துறையின் உதவுதொகை ரூபா 73 இலட்சம் கொண்டதாகும். இதற்கு, வெளிநாட்டிலுள்ள தொடர்புதாரர்களுக்கும், கிளை வங்கிகளுக்கும் உரிய, இலங்கையிலுள்ள வங்கிகளின் பொறுப்புக்கள் அதிகரித்தமையே முழுக் காரணமாக அமையும். எனினும், வளங்களுக்கான இவ் உதவுதொகை இலங்கை வங்கிகளின் அந்நிய நிலுவைகளின் ரூபா 106 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுல் மேலதிகமாக ஈடு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக வங்கிகளின் அதிகரித்த வளங்களின் சிறிய பாகம் (ரூபா 195 இலட்சம்) உள்ளூர்ப் பணவிடயங்களின் உடைமைகள் அதிகரிப்பினுல் உட்கொள்ளப்பட்டது. இது வங்கிகளின் பண உடைமைகளின் அதிகரிப்பினுல் ஏற்பட்டதாகும்.

**2. (ஊ) தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன்**

தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கடன்களின் வெளிநிற்கும் தொகை 1967ம் ஆண்டு இறுதிக்கும் 1968ம் ஆண்டு இறுதிக்கும் இடையில் ரூபா 2,910 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. இது முந்திய ஆண்டு அதிகரிப்பிலும் இருமடங்கு கூடியதும், இதுவரையிற் பதியப்பட்டதிலும் மிக உயர்ந்த ஆண்டு அதிகரிப்புமாகும். இவ் அதிகரிப்பு ஆண்டின் முதலைந்து மாதங்களிலேயே குறிப்பாகக் கூடியதாகும். யூன் மாதத்தில், விவசாயக் கடன் திட்டத்தின்கீழான கடன்களின் மீளக் கொடுப்பனவாலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்குரிய சில முற்பணங்களாலும் வெளிநின்ற கொடுகடன் தொகைகளிற் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டு, யூலை மாதத்தில், உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் நெல் கொள்வனவு செய்வதற்குக் கூட்டுறவுத் தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்ட முற்பணங்களினுலும், விவசாயக் கடன்களின் மேலும் மீளக் கொடுப்பனவினுலும் அதிக வீழ்ச்சி ஏற்பட்டது. ஒகத்தில் கடன்களின் இப்பகுப்பில் மேலும் வீழ்ச்சி இருந்தபோதிலும், முக்கியமாக அம்மாதத்தில், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்குரிய முற்பணங்களின் அதிகரிப்பினுல் தனியார் துறைக்குரிய மொத்தக் கடனிற் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டது. ஆண்டின்

மிகுதிப் பகுதியில் கொடுகடனிற் பொதுவான விரிவு இருந்தது. புதிய பெரும் போக பயிரிடுகைக் காலத் தொடக்கத்துடன் விவசாயக் கடன்கள் அதிகரித்தன. கூட்டுத்தாபனங்களுக்கான கடன்களாவன, புதிய முற்பணங்கள், அவற்றின் குறுகிய கால மூலதனத் தேவைகளுக்கு நிதியீட்டல்கள் அரசாங்கத்திடமிருந்து வர்த்தக வங்கிகளுக்கு மாற்றப்பட்டதனுல் அதிகரித்தன. ஏனைய தனியார் துறைக் கடன் பெறுநர்களுக்கான கடன்களும், பிரதானமாகக் கைத்தொழில் வர்த்தக நோக்கத்திற்கு, அதிகரித்தன. ஆண் டின் இறுதி மூன்று மாதங்களிலும், தனியார் துறைக்கான கொடுகடன்மீது மேல் மட்டவரையொன்று இயக்கத்தில் இருந்தது. இக்காலத்துப் பகுதியில் ஏற்பட்ட உண் மையான அதிகரிப்பு இம் மேல்மட்டத்திற்குட்பட்டதாகும்.

அட்டவணை *II* (ஈ) 10, 1967ம் ஆண் டின் இறுதிக்கும் 1968ம் ஆண்டு இறுதிக்கும் இடையே வெளிநின்ற கொடுகடன் தொகையின் மாற்றங்களைக் காட்டுகிறது.

### அட்டவணை *II* (ஈ) 10

### தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள் *
### திசெம்பர் 1967 — திசெம்பர் 1968

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | இலங்கை வங்கிகள் | | | வெளிநாட்டு வங்கிகள் | | | சகல வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திசெ. 1967 | திசெ. 1968 | மாற்றம் | திசெ. 1967 | திசெ. 1968 | மாற்றம் | திசெ. 1967 | திசெ. 1968 | மாற்றம் |
| (அ) திரட்டப்படும் நிலையிலுள்ள பண வி.** | 55.5 | 51.3 | — 4.7 | 1.4 | 1.2 | — 0.2 | 56.9 | 52.5 | — 4.4 |
| (ஆ) உள்ளூர் உண்டியல் | — | — | — | — | 0.1 | + 0.1 | — | 0.1 | + 0.1 |
| (இ) இ.மதி உண்டியல் | 32.9 | 60.0 | + 27.1 | 22.7 | 29.4 | + 6.7 | 55.6 | 89.4 | + 33.8 |
| (ஈ) ஏற்றுமதிஉண்டியல் | 10.3 | 18.7 | + 8.4 | 43.1 | 61.5 | +18.4 | 53.4 | 80.2 | + 26.8 |
| (உ) மேலதிகப் பற்று ... | 188.4 | 227.7 | + 39.3 | 230.5 | 270.0 | +39.5 | 418.9 | 497.8 | + 78.9 |
| (ஊ) கடன்கள் ... ... | 385.8 | 538.6 | +152.8 | 59.0 | 62.0 | + 3.0 | 444.8 | 600.7 | +155.9 |
| மொத்தம் ... | 672.9 | 896.3 | +223.4 | 356.7 | 424.2 | +67.5 | 1,029.6 | 1,320.6 | +291.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் உள்ளடக்கும்.

** சேகரிப்புக்கென்று அனுப்பப்பட்ட காசோலைகள் வாயிலாக எழுந்த வங்கிகளுக்கிடையே உள்ள கடனின் சிறிய அளவை இப்பகுப்பு அடக்குகின்றது. உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் உணவுப் பொருட்களின் கொள்வனவுக்கான நிதியீட்டத்திற்கென கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட மிகக் குறுகியகால முற்பணங்களையும், கொள்வனவு செய்த பண விடயங்களையும் இது முக்கியமாக உள்ளடக்குகின்றது.

ஆண் டிற் சேகரிக்கப்படுகின்ற பணவிடயங்கள் ரூபா 44 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்துள்ளன. உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெல் கொள்வனவு அதிகரிப்புக் காரணமாக ஆண டின் யூன் மாதத்திற் பொருள் வரவுச் சீட்டு முற்பணங்கள் உச்சநிலையை அடைந்தன. ஆண டின் மிகுதிக் காலப் பகுதியில் இவை வீழ்ச்சி அடைந்தபோதிலும், திசெம்பர் இறுதியில், வெளிநின்ற முற்பணங்களின் தொகை முந்திய ஆண் டினதிலும்பார்க்க ரூபா 72 இலட்சம் அதிகமானதாகும். சேகரிப்பில் உள்ள ஏனைய பணவிடயங்கள் 1968ம் ஆண் டில் ரூபா 117 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்துள்ளன.

ஏற்றுமதி உண்டியல் உடைமைகள், பெரும்பாலும் அந்நிய வங்கிகளில் ரூபா 268 இலட்சம் கொண் ட தொகையால் அதிகரித்தன. ஏற்றுமதி உண்டியல்கள் கடன் உச்ச மட்டங்களின் இயக்கத்திலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன.

வங்கிகளின் உடைமையிலுள்ள தனியார் துறையின் இறக்குமதி உண்டியல்களின் பெறுமதி 1968ம் ஆண்டு ரூபா 338 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பில் ரூபா 154 இலட்சம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் இறக்குமதி உண்டியல்களின் அதிகரிப்பாகும். வங்கிகளின் இறக்குமதி உண்டியல்கள் உடைமைகளின் அதிகரிப்பு முக்கியமாக ஆண்டின் பின் அரைப்பகுதியில் ஏற்பட்டதாகும்.

கடன்கள் மேலதிகப் பற்றுக்களின் அதிகரிப்பு, தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்களின் அதிகரிப்பில் மிக முக்கிய கூறுக அமைந்திருந்தது. கடன்கள் ஏறக்குறைய முழுவதும் இலங்கையர் வங்கிகளில் ரூபா 1,559 இலட்சத்தால் அதிகரித்தன. மேலதிகப் பற்றுக்கள் 789 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. அதில் உள்ளூர் வங்கிகளும், அந்நிய வங்கிகளும் சமபங்கு கொண்டிருந்தன. கடன்களில் ரூபா 611 இலட்சம் கொண்ட அதிகரிப்பும், மேலதிகப் பற்றுக்களில் ரூபா 141 இலட்சம் அதிகரிப்பும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்காகும். கூட்டுறவு நிலையங்களுக்கான கடன்கள் ரூபா 168 இலட்சத்தால் அதிகரித்தன. தனியார் துறையின் ஏனைய கடன் பெறுதற்கான கடன்கள் 779 இலட்சம் ரூபாய்களாலும், மேலதிகப் பற்றுக்கள் 703 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தன.

தேவைகளின்படியும்[1] தவணைகளின்படியுமான வங்கி முற்பணங்களின் பகுப்பாய்வு அட்டவணை II (ஈ) 11இலே தரப்பட்டுள்ளது. இவ் அட்டவணையில் உள்ள புள்ளிவிபரங்கள் யாவும் வைப்புக்கள் முற்பணங்கள் சம்பந்தமாக மத்திய வங்கியினுல் நடாத்தப்பட்ட அளவையிலிருந்து தயாரிக்கப்பட்டவையாகும். அம்முற்பணங்கள் தனியார் துறைக்கான (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் உட்பட) ஏற்றுமதி இறக்குமதி உண்டியல்களையும், கடன்களையும், மேலதிகப் பற்றுக்களையும் குறிப்பனவாகும்.

வர்த்தக வங்கி முற்பணங்களில் அதிகரிப்பிற் பெரும்பகுதியானவை வர்த்தகத் தேவைகளுக்காகவிருந்தன. இவ்வாண்டில் இவ்வகுப்பைச் சேர்ந்த முற்பணங்களின் அதிகரிப்பு 1,444 இலட்சம் ரூபாய்களாகும். இது ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகங்களுக்கிடையில் ஓரளவிற் சமமாகப் பகிரப்பட்டது. மொத்தச் சில்லறை வர்த்தகங்களுக்கான முற்பணங்கள் 171 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இதனைச் சிறிதளவு கூடுதலாக எதிரீடுசெய்து ஏனைய வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்கள் வீழ்ச்சியுற்றன.

கைத்தொழில் தேவைகளுக்கான முற்பணங்கள் 1,037 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. தயாரிப்பு நிறுவனங்களுக்கான முற்பணங்கள் 819 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இதில், ஏறக்குறைய மூன்றிலொன்று அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களுக்காகும். தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களைப் பதனிடுவதற்கான முற்பணங்கள் 124 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், பொறியியற் கட்டடத் தொழில்களுக்கானவை 82 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. மொத்த முற்பணங்களிற் கைத்தொழிலுக்கானவை வகித்த பங்கு 1967ம் ஆண்டிற்குரிய 12.2 சதவீதத்திலிருந்து 1968இல் 17.6 சதவீதத்திற்கு உயர்வுற்றது.

---

1. 1968 யூன் 30ல் நடாத்தப்பட்ட அளவையில் முற்பணங்கள் சம்பந்தமான பகுப்பாய்விற் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனுல், முந்திய அளவைகளில் தெளிவாக விளக்கப்படாதிருந்த சில முற்பணத் தேவையின் தன்மைகள் முறையாக அடையாளமறியப்பட்டு ஏற்புடைய 'தேவை'ப் பகுப்பிற் சேர்க்கப்பட்டுள்ளன. 1967 திசெம்பர் 31ல் முற்பணப்பகுப்பாய்வில் தொடர்பான திருத்தங்கள் செய்யப்பட முடியாதமையினுல் அட்டவணை II (இ) 11ல் உள்ள முற்பணப்பகுப்புகளில் காணப்படும் மாற்றங்கள் 1968 யூன் 30ன் புள்ளிவிபரப்பகுப்பாய்விற் செய்யப்பட்ட சீர்திருத்தத்தினுல் ஏற்பட்டதெனக் கொள்ளலாம். எனினும் இப்புள்ளிவிபரச் சீர்திருத்தங்கள் மொத்த முற்பணங்களைப் பாதிப்பன அல்ல. ஆயினும் இம்முற்பணங்களின் பகுப்பாய்வு கடன்பெறுநரின் வகையின் அடிப்படையையே பிரதானமாகக் கொண்டதேயன்றி, அத்தகைய முற்பணங்கள் உபயோகிக்கப்பட்ட குறிப்பான தேவையின் அடிப்படையில் ஆனவையல்ல.

## அட்டவணை II (ஈ) 11

## தேவைகளின்படியும், மீள்தற்காலங்களின்படியும் பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| தேவை | | குறுகியகால (6 மாதத்திற்குள்) | | நடுத்தரகால (6 முதல் 30 மாதங்கள் வரை) | | நீண்டகால (30 மாதங்களுக்கு மேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) (7)ன் சதவீதமாக (1) | (3) | (4) (7)ன் சதவீதமாக (3) | (5) | (6) (7)ன் சதவீதமாக (5) | (7) | (8) (7)ன் சதவீதமாக (7) |
| (அ) வர்த்தகம் | 1967 திசெம்பர் ... | 206.1 | 41.1 | 200.1 | 39.9 | 94.7 | 18.9 | 500.9 | 51.3 |
| | 1968 யூன் ... | 217.9 | 37.4 | 253.3 | 43.5 | 110.9 | 19.1 | 582.1 | 51.4 |
| | 1968 திசெம்பர் ... | 286.3 | 44.4 | 227.3 | 35.2 | 131.7 | 20.4 | 645.3 | 50.9 |
| (ஆ) நிதி | 1967 திசெம்பர் ... | 36.9 | 35.5 | 35.0 | 33.7 | 32.0 | 30.8 | 103.9 | 10.6 |
| | 1968 யூன் ... | 52.3 | 37.7 | 39.6 | 28.6 | 46.7 | 33.7 | 138.6 | 12.2 |
| | 1968 திசெம்பர் ... | 47.2 | 34.3 | 36.6 | 26.6 | 53.8 | 39.1 | 137.5 | 10.8 |
| (இ) விவசாயம் | 1967 திசெம்பர் ... | 27.7 | 27.0 | 52.4 | 51.2 | 22.3 | 21.8 | 102.4 | 10.5 |
| | 1968 யூன் ... | 13.0 | 12.8 | 62.7 | 61.7 | 25.9 | 25.5 | 101.6 | 9.0 |
| | 1968 திசெம்பர் ... | 24.5 | 18.6 | 75.2 | 57.1 | 31.8 | 24.2 | 131.6 | 10.4 |
| (ஈ) கைத்தொழில் | 1967 திசெம்பர் ... | 60.7 | 51.0 | 29.1 | 24.4 | 29.2 | 24.5 | 119.1 | 12.2 |
| | 1968 யூன் ... | 88.6 | 47.8 | 36.3 | 19.6 | 60.4 | 32.6 | 185.2 | 16.4 |
| | 1968 திசெம்பர் ... | 111.6 | 50.1 | 42.7 | 19.2 | 68.5 | 30.7 | 222.8 | 17.6 |
| (உ) நுகர்ச்சி | 1967 திசெம்பர் ... | 29.5 | 30.5 | 25.9 | 26.8 | 41.2 | 42.6 | 96.6 | 9.9 |
| | 1968 யூன் ... | 12.6 | 14.7 | 27.9 | 32.7 | 44.9 | 52.6 | 85.4 | 7.5 |
| | 1968 திசெம்பர் ... | 14.2 | 14.9 | 32.9 | 34.5 | 48.1 | 50.5 | 95.3 | 7.5 |
| (ஊ) ஏனைய கடன்கள் | 1967 திசெம்பர் ... | 23.2 | 43.6 | 17.1 | 32.1 | 12.8 | 24.1 | 53.2 | 5.4 |
| | 1968 யூன் ... | 3.8 | 9.7 | 19.8 | 50.4 | 15.7 | 39.9 | 39.3 | 3.5 |
| | 1968 திசெம்பர் ... | 4 3 | 12.1 | 17.1 | 48.2 | 14.1 | 39.7 | 35.5 | 2.8 |
| (எ) மொத்தம் | 1967 திசெம்பர் ... | 384.1 | 39.3 | 359.6 | 36.8 | 232.4 | 23.8 | 976.1 | 100.0 |
| | 1968 யூன் ... | 388.3 | 34.3 | 439.5 | 38.8 | 304.5 | 26.9 | 1,132.3 | 100.0 |
| | 1968 திசெம்பர் ... | 488.1 | 38.5 | 431.8 | 34.0 | 348.0 | 27.4 | 1,268.0 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* முற்பணங்களாவன, கடன்கள், மேலதிகப் பற்றுக்கள், கழிவுபட்ட உண்டியல்கள் ஆகியனவற்றை (சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி) உட்படுத்தும்.

கமத்தொழில் தேவைகளுக்கான முற்பணங்கள் 292 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இதில் 147 இலட்சம் ரூபா கொண்ட அதிகரிப்பு திசெம்பர் முடிவு 1967ற்கும் 1968ற்கும் இடையிற் புதிய கமத்தொழிற் கொடுகடன் திட்டத்தின்கீழ் வெளிநின்ற தேறிய கொடுகடன்களாகும். ஆயினும், 1968/69 பெரும்போகப் பருவகாலத்திற்கு வழங்கப்பட்டு, 1968 திசெம்பர் முடிவில் வெளிநின்ற கடன்களின் பெறுமானம் 1967 திசெம்பர் முடிவில் வெளிநின்ற 1967/68 பெரும்போகக் கடன் தொகைகளிலும் பார்க்கக் குறைவானதாகும். இவ்விரு தேதிகளுக்குமிடையில் வெளிநின்ற கொடுகடன்களின் அதிகரிப்பானது, 1968 முடிவிலே திருப்பிக் கொடுக்கப் படாதிருந்த 1968 சிறுபோகக் கடன் தொகைகளினுலாகும். இத் திட்டத்தின் செயற்பாடுகள் மிக விரிவாக இங்கு பின் வேருெரு பிரிவிற் கூறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழான நெற்பயிற்செய்கைகளும், ஏனைய உப பயிர்களுக்குமான கொடுகடன் அதிகரிப்பைத் தவிர ஏனைய பயிர்களுக்கான கொடுகடன்களும் அதிகரித்தன. ஆயினும், தேயிலே, இரப்பர், பயிர்செய்கைகளுக்கான கொடுகடன் இவ்வாண்டின்போது சிறிது வீழ்ச்சியுற்றது. மொத்த முற்பணங்களிற் கமச் செய்கைக்கான கொடுகடன்களின் பங்கு திசெம்பர் இறுதியில் 10.4 சதவீதமாக அமைந்து, முந்திய திசெம்பரிலும்பார்க்கச் சிறிது வேறுபடாது காணப்பட்டது.

நிதித் தேவைகளுக்கான முற்பணங்கள் இவ்வாண்டின்போது 337 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இதில் நிதிக் கூட்டுநிலேயங்களுக்கான முற்பணங்களோடு உண்மை ஆதனங்களிலும், பங்கு முறிகளிலும் முதலீடுசெய்வதற்காக ஏனைய கடன்பெறுநர்க்கு வழங்கப்பட்ட முற்பணங்களும் அடங்கும். மொத்த முற்பணங்களில் இவை இவ்வாண்டின் இறுதியின்போது வகித்த பங்கு 10.8 சதவீதமாக அமைந்து, 1967ன் இறுதியில் இருந்ததிலும்பார்க்கச் சிறிது அதிகரித்தன.

நுகர்ச்சிக் கடன்கள் இவ்வாண்டில் ஓரளவு வீழ்ச்சியுற்று 1968ன் இறுதியில் மொத்த முற்பணங்களின் 7.5 சதவீதமாக இருந்தமை முந்திய ஆண்டிற்குரிய 9.9 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. அழிவற்ற நுகர்ச்சிப் பொருட்களின் கொள்வனவுக்கான முற்பணங்கள் உண்மையில் அதிகரித்திருக்கையில், ஏனைய சொந்தத் தேவைகளுக்கான முற்பணங்கள் பெரிய அளவால் வீழ்ச்சியுற்றன. தொகுதியைச் சேர்ந்த 'ஏனைய கடன்கள்' 1968ல் 177 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. மொத்த முற்பணங்களில் அவற்றின் பங்கும் 5.4 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதத்திற்குக் குறைவுற்றது.

கடந்த சில ஆண்டுகளாக மாற்றமடையாதிருந்த வர்த்தக வங்கி முற்பணங்களின் தவணை அமைப்பு 1968இற் சில மாற்றத்தைக் காட்டிற்று. மொத்த முற்பணங்களில் நீண்ட தவணை (30 மாதங்களுக்குமேல்) முற்பணங்களின் விகிதசமம் 23.8 சதவீதத்திலிருந்து 27.4 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில், குறுகியதவணை (6 மாதங்களுக்குக்கீழ்), நடுத்தரத் தவணை (6-30 மாதங்கள்) முற்பணங்கள் சிறுது வீழ்ச்சியுற்றன. நீண்டகால முற்பணங்களின் அதிகரித்த முக்கியத்துவம் சகல பகுப்புக் கடன்களிலும் பிரதிபலிக்கப் பட்டுள்ளது.

வட்டிவீதங்களின்படியான முற்பணங்களின் பகுப்பு அட்டவணை II (ஈ) 12இற் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை II (ஈ) 12

### வட்டிவீதங்களின்படியுள்ள முற்பணங்கள் *

| வட்டிவீதம் | 1967 திசெம்பர் 31 | | 1968 யூன் 30 | | 1968 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக |
| 2 கீழ் ... ... | 4.9 | 0.5 | 5.3 | 0.5 | 15.1 | 1.3 |
| 2½ ... ... | 1.8 | 0.2 | 0.1 | ... | 0.5 | ... |
| 3 ... ... | 0.3 | ... | 0.1 | ... | 0.1 | ... |
| 3½ ... ... | 1.0 | 0.1 | 1.2 | 0.1 | 4.6 | 0.4 |
| 4 ... ... | 1.8 | 0.2 | 1.0 | 0.1 | 2.7 | 0.2 |
| 4½ ... ... | 12.3 | 1.3 | 2.7 | 0.3 | 2.8 | 0.2 |
| 5 ... ... | 29.1 | 3.1 | 28.0 | 2.6 | 22.8 | 1.9 |
| 5½ ... ... | 32.8 | 3.5 | 17.4 | 1.6 | 16.2 | 1.4 |
| 6 ... ... | 60.4 | 6.5 | 104.9 | 9.9 | 121.8 | 10.3 |
| 6½ ... ... | 156.7 | 16.9 | 49.9 | 4.7 | 96.9 | 8.2 |
| 7 ... ... | 261.4 | 28.3 | 308.4 | 29.1 | 232.4 | 19.6 |
| 7½ ... ... | 106.8 | 11.5 | 262.4 | 24.8 | 300.6 | 25.4 |
| 8 ... ... | 167.0 | 18.0 | 161.5 | 15.2 | 209.7 | 17.7 |
| 8½ ... ... | 11.8 | 1.3 | 35.5 | 3.3 | 50.4 | 4.3 |
| 9 ... ... | 59.4 | 6.4 | 53.0 | 5.0 | 69.2 | 5.8 |
| 9ம் அதற்கு மேலும் ... | 17.4 | 1.9 | 28.4 | 2.7 | 37.3 | 3.1 |
| மொத்தம் | 925.1 | 100.0 | 1,059.9 | 100.0 | 1,183.3 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* நடைமுறைச் செலாவணி வீதங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களையும், சேகரிப்பு நிலையிலிருக்கும் பண விடயங்களையும் நீக்கி.

வட்டிவீதப் பகுப்பாட்டின்படி முற்பணங்களின் மிகப் பெரிய பங்கு 6½ சதவீதத்திலிருந்து 8 சதவீதம் வரையான பரப்பிலேயே காணப்பட்டது. மொத்த முற்பணங்களில் இவ்வீதத்திலான முற்பணங்களின் பங்கு 1967ற்குரிய 74.7 சதவீதத்திற்காக இவ்வாண்டில் 70.9 சதவீதமாக விளங்கிற்று. இத்தொகுதியிற் பெரும்பாலான முற்பணங்கள் 7½ சதவீத வட்டியிலேயே கொடுக்கப்பட்டன. சென்ற ஆண்டில் அவை 7 சதவீதத்திலேயே பெரிதும் காணப்பட்டன. இம்மாதிரித் தொகுதியின் ஒப்பியளலவில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து உயர்ந்த வட்டிவீதமுடைய தொகுதியின் முக்கியத்துமும் அதிகரித்தது. 8½ சதவீதத்திலும் அதற்கு மேலும் வழங்கப்பட்ட முற்பணங்களின் விகிதசமம் 1967ற்குரிய 9.6 சதவீதத்திலிருந்து 13.2 சதவீதத்திற்கு உயர்வுற்றது. மாதிரித் தொகுதிக்குக் கீழ்ப்பட்ட வட்டிவீதங்களிலும் 6 சதவீத வட்டிவிகிதத்தை நோக்கியே அதிகரிப்புக் காணப்பட்டது. 6 சதவீதத்தின்படியும், அதற்கும் குறைவான வீதங்களிலுமான தொகுதியில், வழங்கப்பட்ட முற்பணங்களின் ஒப்பியல்பங்கு 15.4 சதவீதத்திலிருந்து 15.7 சதவீதத்திற்குச் சிறிய அளவால் அதிகரித்ததெனினும், அத்தொகுதியின் உள்ளே 6 சதவீதத்தின்படியான முற்பணங்களின் முக்கியத்துவம் கூடிய அதிகரிப்பையும், 6 சதவீதத்திலும்பார்க்கக் குறைந்த வட்டிவீதங்களின்படியான முற்பணங்கள் ஒப்பியல்பில் வீழ்ச்சியுற்றும் காணப்பட்டன.

அடமானவகைப்படியான முற்பணங்களின் பகுப்பு அட்டவணை II (ஈ) 13 இற் தரப்பட்டுள்ளது.

அட்டவணை II (ஈ) 13

அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள் *

| அடமானத்தின் வகை | 1967 திசெம்பர் 31 | | 1968 யூன் 30 | | 1968 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சத வீதமாக |
| ஆவண உண்டியல்கள் ... ... | 132.2 | 13.5 | 141.7 | 12.5 | 183.0 | 14.4 |
| அரசாங்கப் பிணைகள் ... ... | 14.8 | 1.5 | 24.6 | 2.2 | 16.8 | 1.3 |
| கூ.பங்கு நிலையங்களின் ப.முதல்... | 17.8 | 1.8 | 19.3 | 1.7 | 20.9 | 1.6 |
| தவணை சேமிப்பு வைப்புக்களும் ஏனைய பண வைப்புக்களும் (ஆயுட்காப்புறுதிகளின் பணப் பெறுமானங்கள் உட்பட) ... | 51.3 | 5.3 | 56.4 | 5.0 | 50.2 | 4.0 |
| வியாபாரக் கையிருப்பு ... | 200.4 | 20.5 | 276.1 | 24.4 | 268.1 | 21.1 |
| அசைவற்ற சொத்து ... ... | 102.3 | 10.5 | 112.0 | 9.9 | 121.6 | 9.6 |
| ஏனையவை ... ... ... | 371.5 | 38.1 | 433.0 | 38.2 | 542.5 | 42.8 |
| பிணையற்றவை ... ... | 85.6 | 8.8 | 69.1 | 6.1 | 64.8 | 5.1 |
| மொத்தம் ... ... | 976.1 | 100.0 | 1132.3 | 100.0 | 1268.0 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* சேகரிப்பு நிலையிலுள்ள ணவிடயங்களை நீக்கி.

ஆவண உண்டியல்களை அடமானமாகக் கொண்டு பெறப்பட்ட முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது, வங்கிகளின் உடைமைகளிலுள்ள ஏற்றுமதி இறக்குமதி உண்டியல்களினது உயர்ச்சியின் பிரதிபலிப்பென்பது முன்பு கூறப்பட்டது. அரசாங்கப் பிணைகளுக்கும், கூட்டுப்பங்கு நிலையங்களின் பங்குமுறிகளுக்குமெதிராகப் பெறப்பட்ட கடன்கள் சிறிய அளவால் மட்டும் அதிகரித்தன. ஆயினும், மொத்த முற்பணங்களில் அவற்றின் பங்கு இவ்வாண்டின்போது ஓரளவு வீழ்ச்சியுற்றது. தவணைச் சேமிப்பு வைப்புக்கள் இவ்வாண்டின்போது அதிகரித்ததெனவெனினும், முற்பணங்களுக்கு அடமானமாக அவை உயர்ந்தளவுகளில் உபயோகிக்கப்படவில்லை. தவணைச் சேமிப்பு வைப்புக்களையும், ஆயுட்காப்புறுதிகளின் பணப் பெறுமானங்களையும் அடமானமாகக்கொண்ட முற்பணங்கள் மொத்தத் தொகையளவின்படியும், மொத்த முற்பணங்களின் விகிதசமப்படியும் சிறிது வீழ்ச்சியுற்றன.

வியாபார இருப்புக்களை அடமானமாகக் கொண்டு பெற்ற கடன்கள் 677 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், மொத்த முற்பணங்களில் அவற்றின் பங்கு 20.5 சதவீதத்திலிருந்து 21.1 சதவீதத்திற்குச் சிறிது அதிகரித்தது. அசைவற்ற சொத்துக்களுக்கெதிராகப் பெற்ற கடன்கள் ரூபா 193 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், மொத்த முற்பணங்களில் அவற்றின் பங்கு 10.5 சதவீதத்திலிருந்து 9.6 சதவீதத்திற்குச் சிறிது வீழ்ச்சியுற்றது. ஏனையவகையான அடமானங்களுக்கெதிராகப் பெற்ற முற்பணங்கள் 1,710 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து, மொத்த முற்பணங்களில் அவற்றின் விகிதசமம் 38.1 சதவீதத்திலிருந்து 42.8 சதவீதத்திற்கு உயர்வுற்றது. அடமானமில்லா முற்பணங்கள் இவ்வாண்டில் வீழ்ச்சியுற்று, மொத்த முற்பணங்களில் 5,1 ச'தவீ மாக மட்டும் விளங்கின,

**2. (எ) விரிவாக்கப்பட்ட கொடுகடன் திட்டமும் கிராமிய வங்கிகளும்**

விரிவாக்கப்பட்ட கொடுகடன் திட்டத்தின்கீழ், மக்கள் வங்கியானது தூரக் கிராமப் பகுதிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களினூடாகக் கொடுகடன் வசதிகளை வழங்கிவருகின்றது. மக்கள் வங்கியானது தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிகளை வழங்க, இச்சங்கங்கள் இந்நிதிகளை, விவசாய உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில்கள், வீடு கட்டல், வீடுகளைப் பெருப்பித்தல், புதுப்பித்தல், கடனழித்தல், மின்சார வசதி நுகர்ச்சி, அவசரகாலத் தேவைகள் ஆகிய குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக, அங்கத்தவர்களுக்கு வழங்கும்.

1968ம் ஆண்டில் இத்திட்டத்தை அமுல்நடத்திய சங்கங்களின் எண்ணிக்கை 60ல் இருந்து 69க்கு அதிகரித்திருக்கையில், மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட மேலதிகப்பற்று எல்லைவரைகள் 190 இலட்சம் ரூபாய்களிலிருந்து 184 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றன. இம்மேலதிகப் பற்றுக்களின் உண்மையான பாவிப்பும் 129 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1968ன் முடிவில் 116 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது.

1964ம் ஆண்டில் ஆக்கப்பட்ட கிராமிய வங்கிகள் திட்டம் 1968ல் மிகவும் விரிவடைந்தது. இத்திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினரிடமிருந்தும், உறுப்பினரல்லாதாரிடமிருந்தும் சேமிப்புக்களையும், நிலையான வைப்புக்களையும் பெற்று, உறுப்பினர்களுக்குக் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகக் கடன்களை வழங்குகின்றன. கிராமிய வங்கிகளுக்குக் கடன் வழங்கலுக்குத் தேவையான மேலதிக வளங்கள், மக்கள் வங்கியினுடனான மேலதிகப் பற்று வசதிகளின் மூலம் வழங்கப்படுகின்றன. மக்கள் வங்கி இவைகளுக்குத் தேவையான வேளைகளில் முகாமை உதவியும் வழங்குகின்றது. கடன்களின் குறிப்பிடப்பட்ட நோக்கங்களும் அவைகளின் அளவும் மீளக் கொடுப்பனவு பற்றிய நிபந்தனைகளும், விரிவாக்கப்பட்ட கொடுகடன் திட்டத்திலுள்ளவாறே உள்ளன.

1968ல் 17 கிராமிய வங்கிகள் திறக்கப்பட்டதால், 1968ன் முடிவில் அவைகளின் மொத்த எண்ணிக்கை 44ஆக விளங்கிற்று. இவ்வாண்டில் கிராமிய வங்கிகளிலுள்ள சேமிப்புக் கணக்குகள் 8,792லிருந்து 17,359ற்கு அதிகரித்திருக்க, சேமிப்பு வைப்புக்களின் தொகை 13 இலட்சம் ரூபாய்களிலிருந்து 31 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. சராசரி சேமிப்புவைப்பு 148லிருந்து ரூபா 179ற்கு அதிகரித்தது. நிலையான வைப்புக்களின் எண்ணிக்கை 41லிருந்து 287ற்கும், அதன் தொகை 65,381 ரூபாவிலிருந்து 222,614 ரூபாவுக்கும் அதிகரித்தது. சராசரி நிலையான வைப்பு ரூபா 1,595லிருந்து ரூபா 776ற்குக் குறைவுற்றது. சேமிப்பு வைப்புக்களினதும், நிலையான வைப்புக்களினதும் மொத்தம் 14 இலட்சம் ரூபாய்களிலிருந்து 33 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது.

விரிவாக்கப்பட்ட கொடுகடன் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்டதைப் போன்ற அதே நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை (அட்டவணை II (ஈ) 14இற் பகுக்கப்பட்டபடி) 203 இலட்சம் ரூபாய்களிலிருந்து 376 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. கடன்களின் எண்ணிக்கை 1967ம் ஆண்டின் 2,897லிருந்து 1968ம் ஆண்டில் 5,586ற்கு அதிகரித்ததனால், சராசரிக் கடனனது 1967ல் இருந்த ரூபா 701ல் இருந்து 1968ல் ரூபா 673ற்குக் குறைவுற்றது.

அட்டவணை II (ஈ) 14

நோக்கங்களின்படியான கிராம வங்கிக் கடன்கள்

1968 திசெம்பர் 31இல் உள்ளபடியான

| நோக்கம் | தொகை (ரூபாய்கள்) | | மொத்தத்தின் சதவீதம் | |
|---|---|---|---|---|
| உற்பத்தி-அதில் ... ... | | 1,010,280 | | 26.9 |
| (1) விவசாயம் ... ... ... ... | 844,802 | | 22.5 | |
| (2) கால்நடை வளர்ச்சி ... ... ... | 75,082 | | 2.0 | |
| (3) குடிசைக் கைத்தொழில் ... ... | 90,396 | | 2.4 | |
| வீடு கட்டல் ... ... ... ... ... | | 1,334,229 | | 35.5 |
| கடனழித்தல் ... ... ... ... ... | | 1,006,675 | | 26.8 |
| வர்த்தகம் ... ... ... ... ... | | 214,449 | | 5.7 |
| நுகர்ச்சி ... ... ... ... ... | | 71,621 | | 1.9 |
| மின்சார வசதி... ... ... ... ... | | 7,313 | | 0.2 |
| ஏனையவை ... ... ... ... ... | | 112,695 | | 3.0 |
| மொத்தம்... ... ... ... ... | | 3,757,262 | | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

கேள்வி வைப்புக்களிலும், முற்பணங்களிலும் அதிகரிப்பு ஏற்பட்டபோதிலும், வைப்புக்களில் ஏற்பட்ட கூரிய அதிகரிப்பு முற்பணங்களிலேற்பட்ட அதிகரிப்பை மேலதிகமாக ஈடுசெய்தது. இதன் விளைவால் மக்கள் வங்கியின் வளங்களில் கிராமிய வங்கிகள் தங்கியிருக்கவேண்டியமை குறைவுற்றது.

மேற்குறிப்பிட்ட கடன்களுடன் கிராமிய வங்கிகள் அடைவு பிடித்தற் தொழிலிலும் ஈடுபட்டிருந்தன. 1967ன் முடிவில் 6,598 கொடுக்கல்வாங்கல்மீது ரூபா 6,33,214 கொண்ட தொகைக்கு அடைவு பிடித்தற்கெதிராக 1968ன் முடிவில் 9,507 கொடுக்கல்வாங்கல்கள்மீது ரூபா 9,58,982ற்கு அடைவு பிடிக்கப்பட்டது. இத்தொழில் மக்கள் வங்கியின் முகவர்களென்ற முறையில் கிராம வங்கிகளாற் செய்யப்படுகின்றது.

**2. (ஏ) புதிய விவசாயக் கொடுகடன் திட்டம்**

1967 செத்தெம்பர் தொடக்கம் 1968 திசெம்பர் வரையான காலப்பகுதியின் புதிய விவசாயக் கொடுகடன் திட்டம் இங்கு மீளப்பார்வையிடப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய பண்புகளாவன:—

(அ) ஆண்டிற்கு 5% வட்டியின் அடிப்படையிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மக்கள் வங்கி கடன் கொடுக்க, கூட்டுறவுச் சங்கங்கள் தமது உறுப்பினருக்கு, ஆண்டிற்கு உயர்ந்த மட்டமான 9 சதவீத அடிப்படையிற் கடன் வழங்குகின்றன. கூட்டுறவுச் சங்கமோ உறுப்பினரோ குறித்த காலத்திற் கடனைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், மேற்குறித்த வீதத்தோடு ஆண்டிற்கு 3% அதிகரித்த வட்டியும் அறவிடப்படும்,

ஆறு கூட்டுறவு வங்கிகளினூடாக மக்கள் வங்கி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் வழங்குகிறது. குறித்த காலத்திற்குள்ளே திருப்பிக் கொடுக்கப்படவேண்டிய இக்கடன் தொகைக்கு ஆண்டிற்கு 3½ சதவீத வட்டியைக் கூட்டுறவு வங்கிகள் கொடுக்கின்றன. அத்துடன் காலந்தவறி வெளிநின்ற கடன்களின்மீது மேலதிகமான 5 சதவீத வட்டியும் அறவிடப்படும். உத்தரவாதக் கட்டணக் கூலியான 1 சதவீதமும், திருப்பிக் கொடுக்கப்படாத தொகைகளும் கூட்டுறவு வங்கியினுலும் மக்கள் வங்கியினுலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் மக்கள் வங்கியினுல் அளிக்கப்பட்ட முழுக் கடன் தொகைக்கும் மத்திய வங்கி நிதியீட்டுகின்றது.

(இ) கடனுகப் பெற்ற நிதிகளுக்குக் கூட்டுறவு நிலையங்கள் ஒரு வாக்குறுதிப் பத்திரத்தை அடமானமாகக் கொடுத்து, உறுப்பினர்களிடமிருந்தும் அதே முறையிற் கமக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்ட முழுக் கடன் தொகை திருப்பிக் கொடுக்கப்படும்வரை, அதற்குச் சமமான பங்கீட்டரிசியைக் கமக்காரர்களினதும், உறுப்பினர்களினதும் பங்கீட்டரிசியிலிருந்து அடமானமாகத் தடுத்து வைத்திருக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் கமக்காரர்களிடமிருந்து உரிமை பெற்றுக்கொள்கின்றன. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஒரு படி அரிசியின் பெறுமானம் ஒரு ரூபாவென மதிக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியானது திருப்பிக் கொடுக்கத்தவறிய கடன்களின் 75 சதவீதமான தொகையை உத்தரவாதமளிக்கின்றது. அவ்வாறு உத்தரவாதம் அளிப்பதற்காக அறவிடப்படும் கட்டணம், கடன் தொகையின் 1 சதவீதமாகும்.

(உ) ஒவ்வொரு கமக்காரரும் கடனுகப் பெறுவதற்கு உரிமையுடைய தொகை 1967/68 பெரும்போகத்திற்கும், 1968 சிறுபோகத்திற்கும் ஏக்கருக்கு ரூபா 220 ஆகவும், 1968/69 பெரும்போகத்திற்கு ரூபா 262 ஆகவும் உள்ளன. இது உயர்ந்த பட்சம் 10 ஏக்கர்களுக்குமட்டும் என்ற அடிப்படையில் அமைவானதாகும். இக் கடன்கள் 3 தவணைகளில் வழங்கப்படுகின்றன.

1967/68 பெரும்போகம், 1968 சிறுபோகம், 1968/69 பெரும்போகம் ஆகியவற்றின் அடிப்படையில் நெற்பயிற்செய்கைக் கடன் திட்டம் இங்கு பகுப்பாயப்படுகின்றது. மீளப்பார்வையிடும் ஆண்டின்போது 1967/68 பெரும்போகக் காலக் கடன்களின் திருப்பிக் கொடுப்பனவுக்கான கால எல்லைக் காலம் கடந்துவிட்டது. 1968 சிறுபோகக் கடன்களின் பெரும்பகுதி மீட்கப்படவேண்டியவையாயிருக்கின்றன. 1968/69 பெரும்போகக் கடன்கள் இவ்வாண்டின் கடைக்காற் பகுதியில் ஆரம்பமாகின. துணைப்பயிர்களுக்கான கடன்கள் 1967 ஒற்ரேபர் முதல் 1968 திசெம்பர் வரை உள்ளபடி, பகுப்பாயப்படுகின்றன.

### 1967/68 பெரும்போக நெற்கடன்கள்

1967/68 பெரும்போக நெற்கடன்கள், ஒவ்வொரு கமக்காரருக்கும் உயர்ந்த பட்சம் 10 ஏக்கர் என்ற அடிப்படையில் ஏக்கருக்கு ரூபா 220 வீதம் வழங்கப்பட்டது. இத்தொகை 3 தவணைகளிற் கொடுக்கப்பட்டன. முதலாவது தவணை உழவு, விதை நெல் (தேவையானவிடத்தில்), நாற்று நடுகை, வரிசை நடுகை, களை பிடுங்கல் ஆகியவற்றின் மொத்தச் செலவில் உயர்ந்தபட்சம் ஏக்கருக்கு 137 ரூபாவின்படி, முற்பணமிடப்பட்டது. இரண்டாந் தவணைப் பணமானது, உரம், விதை நெல், கிருமிநாசினிகள் ஆகியவற்றைக் கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்கியதற்காக மக்கள் வங்கியினுல் விவசாயச் சேவைத் துணை-ஆணையாளர்களுக்கு நேரடியாகக் கொடுக்கப்பட்டது. மூன்ரும் தவணை நிதி ஏக்கருக்கு 25 ரூபாய்களின்படி அறுவடைக்காகக் கொடுக்கப்பட்டது.

மக்கள் வங்கியினுல் 781.2 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகைக்கு அநுமதி வழங்கப்பட்டதெனினும், கூட்டுறவு நிலையங்களினுல் 614.1 இலட்சம் ரூபாய்கள்மட்டுமே உபயோகிக்கப்பட்டது. கொடுகடன் வசதிகள் கமக்காரர்களாற் குறைவாக உபயோகிக்கப்பட்டமை ஒருவேளை கொடுகடன் தேவைகள் மிகைமதிப்பீடு செய்யப்பட்டதனுலும், சில கமக்காரர்கள் தமது பங்கீட்டரிசிப் புத்தகங்களை அடமானமாக வைக்க விரும்பாததினுலும் ஏற்பட்டிருக்கக்கூடும்.

விநியோகிக்கப்பட்ட கடன்களும், திருப்பிப்பெறப்பட்ட வகையிலான தொகைகளும், திருப்பிக் கொடுக்கப்படவேண்டிய தவணைக்காலம் பயிர் விளைச்சலின்மையினுல் நீடிக்கப்பட்ட கடன்களின் தொகையும், திருப்பிக் கொடுக்கப்படாத தொகையும் அட்டவணை II (ஈ) 15இற் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஈ) 15

1967/68 பெரும்போகத்திற்காக
கடன்கள், அறவீடுகள், நெற்கடன்கள் நீடிப்பு

| | ப. இ. ரூபாய்களில் | சங்கங்களுக்கு அநுமதிக்கப்பட்ட மொத்தத்தின் வீதம் |
|---|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களுக்கு அநுமதிக்கப்பட்ட தொகை... ... ... ... ... ... | 61.4 | 100.0 |
| உறுப்பினர்களால் தம் விருப்பமாக மீளக்கொடுக்கப்பட்ட தொகை ... ... ... ... ... | 42.6 | 69.4 |
| அரிசிக்கூப்பன் மூலமாக அறவிடப்பட்ட தொகை | 4.6(அ) | 7.5 |
| மொத்த அறவீடுகள் ... | 47.2 | 76.9 |
| பயிர் விளைவின்மை காரணமாக நீடிக்கப்பட்ட கடன்களின் தொகை... ... ... ... ... | 3.0(ஆ) | 4.9 |
| தவறுகையில் உள்ள கடன்களின் தொகை... ... | 11.2 | 18.2 |

மூலங்கள் : 1. மக்கள் வங்கி.
2. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.

1. 31. 12. 68ல் உள்ளபடியான, மக்கள் வங்கிக் கிளை கடனுள்ள சங்கங்களின் கணக்குகளிற்கு 26 இலட்ச ரூபாய்கள் மட்டுமே உண்மையாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

2. இத்தொகைகள் 15. 12. 68 வரைக்கு மட்டுமேயாகும்.

முழுக் கடன் தொகையில் 69.4 சதவீதமானவை தன்விருப்பமாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டவையாகவும், 7.5 சதவீதமானவை பங்கீட்டரிசிப் புத்தகங்களினூடாக அறவிடப்பட்டனவையாகவும் இருந்தமையில், மொத்த அறவீடு மொத்தக் கடன் விநியோகத்தின் 76.9 சதவீதமாக அமைந்துள்ளது. பயிர்விளைச்சலின்மையினுல் திருப்பிக் கொடுப்பதில் ஏற்பட்ட இடையூறுகள் யாவும், கவனயீனம், வேண்டுமென்று தவறுதல் ஆகிய காரணங்களினுல் ஏற்படும் திருப்பிக் கொடுக்கப்படாமைகளிலிருந்து புறம்

பானவிதத்திற் கொண்டுநடத்தப்பட்டன. எனவே, பயிர்விளைச்சலின்மை, அழிவு ஆகிய காரணங்களால் மீளக் கொடுப்பதிற் தாமதம் ஏற்பட்ட, கடன்களின் திருப்பிக் கொடுப்பனவு அடுத்த மூன்று காலப்போகங்களிலும் சமமான மூன்று தவணைப் பணங்களிற் கொடுப்பதற்கு நீடித்த தவணை வழங்கப்பட்டது. பயிர்விளைச்சலின்மையின் காரணமாக 4.9 சதவீதமான கடன்களின் மீளற்காலம் அடுத்துவரும் மூன்று காலபோகங்களில் மீளப்பட வேண்டுமென நீடிக்கப்பட்டது. நீடித்த கடன்களுக்கு இடம்விட்டுக் கணிக்குமிடத்து, உண்மையாகத் தவறிய கடன்களின் தொகை, மொத்தக் கடன்களில் 18.2 சதவீதமாக உள்ளது. மீளக் கொடுப்பனவுகளின் போக்கையும், பங்கீட்டரிசிப் புத்தகங்களினூடாக அறவிடப்படக்கூடிய வாய்ப்பையும் நோக்குமிடத்து, தவறிய கடன்களிற் பெரும்பகுதியான தொகை பங்கீட்டரிசிப் புத்தகங்களினூடாக அறவிடப்படுமெனத் தெரிகிறது. வர்த்தக வங்கியினுல் நிருவகிக்கப்படுகின்ற இத்திட்டம், ஒரு கண்டிப்பான வர்த்தக முறையிற் செயல்நடாத்தப்படாததாகவிருப்பதால், பெறப்படும் கடன்கள் யாவும் பங்கீட்டரிசிப் புத்தகங்களின் அடமானத்தால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளமை உயர்ந்த விகிதாச்சாரமான தொகை அறவிட்டுக்கொள்ளப்படுவதற்கு வழி வகுத்துள்ளது.

முந்திய ஆண்டில் இத்திட்டம் விவசாயச் சேவைத் திணைக்களத்தாற் செயல்நடாத்தப்பட்டபொழுது, விநியோகிக்கப்பட்ட நிதியில் 45.9 சதவீதமானவை மட்டுமே அறவிடப்பட்டது. 1967/68 பெரும்போகத்திற் கடனுக வழங்கப்பட்ட 614 இலட்சம் ரூபாய்களில், 426 இலட்சம் ரூபாய்கள் தன் விருப்பமாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டிருந்தமை, 1966/67 பெரும்போக, சிறுபோகக் காலங்களில் வழங்கப்பட்ட 323 இலட்சம் ரூபாய்களிற் திருப்பிக் கொடுக்கப்பட்ட 148 இலட்சத்துடன் ஒப்பிடற்குரியது.

1966/67ன் அறவீடுகள், உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழான கொள்வனவுகள் குறைவுற்றமையால், தாழ்வுற்றிருந்தன. ஆயினும், ஏனைய ஆண்டுகளில், உத்தரவாத விலைகள் சந்தை விலைகளிலும்பார்க்கக் கூடுதலாகவிருந்து, உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழான கொள்வனவுகள் வலியுற்றிருந்தபொழுது உ.வி.தி. கொடுப்பனவுகளிலிருந்து அறவீடுசெய்தல் இயலுமாயிருந்தது. அத்துடன் கூட்டுப்பொறுப்பும் 1953/54 முதல் 1962/63 வரையான காலப்பகுதியிற் கண்டிப்பாக வேண்டப்பட்டமையால், 1947/48 முதல் 1966/67 வரை விவசாயச் சேவைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிதிகளில் 75 சதவீதமானவை திருப்பிப் பெறமுடிந்தன. நெல்லின் உத்தரவாத விலை, சந்தை விலையிலும்பார்க்கக் குறைவாகவும் கூட்டுப் பொறுப்பைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்ததன் மூலமாக சில கமக்காரர்கள் திருப்பிக் கொடுக்கத் தவறியமையினுல் திருப்பிக்கொடுக்கத் தவருத கமக்காரர்களுக்குக் கடன் வழங்க மறுப்பது தகாது எனக் கருதப்படுகின்ற நிலைகளில், பங்கீட்டரிசியைத் தடுத்துவைப்பது ஓர் உயர்ந்த மட்டமான கடன் மீட்டலை வரவுறுதி செய்வதற்கு உதவியாயிருந்தது. பெருந்தொகையான கமக்காரர்கள் நிலச் சொந்தக்காரர்களல்லாமலும், அல்லது அடமானமாகக் கொடுப்பதற்குக் காணிகள் சம்பந்தமாகச் சிறந்த உறுதி ஆவணங்கள் வைத்திருக்காததினுலும், மேற்கூறியுள்ள முறை மிகச் சிறப்பான அம்சமாக அமைந்துள்ளது.

பெரும்போகக் கடன்களுக்காகப் பங்கீட்டரிசிப் புத்தகங்களை அடமானமாக ஒப்படைக்க வேண்டியதுமன்றி, 1967/68 பெரும்போகக் கடன்கள் முழுவதும் இவ்விதத்தில் அறவிட்டு முற்றடையாத தவறுநர்கள் புதிய கடன்களுக்கு உரித்துடையராகார். கமக்காரர்கள் தமது உற்பத்திகளை விற்க முடியாமற் போய்விட்டதெனச் சான்றுரைக்கப்படின், அடுத்த போகத்திற்குக் கடன் மறுக்கப்படமாட்டாது. அப்படியாகக் கடன்கள் ஒன்றுகூடத்தக்க சந்தர்ப்பங்களில் முதலாவது தவணைப் பணம் கடனுகக் கொடுக்கப்படுமேயன்றி முதற்போகத்திற்குக் கொடுக்கப்பட்ட கடன் திருப்பிக் கொடுக்கப்படும்வரை மற்றத் தவணைப் பணங்கள் கொடுக்கப்படமாட்டா.

நெற் கடன்கள் அறவிடப்பட முடியாமற் போனதிற்குப் பயிர்விளைச்சலின்மை காரணமாக விருந்ததென்பது தவறென்பதை 1967/68ம் ஆண்டுப் பெரும்போக அனுபவங்கள் தெரிவிக்கின்றன. பயிர்விளைச்சளின்மையால் கடன்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டமை 4.9 சதவீதமாக மட்டும் இருக்கையில், ஏனைய காரணங்கள் 18.2 சதவீதத்திற்கு வகைதந்தன. இது பிரதேசங்

களின்படியான தவறுதல்நிலை சம்பந்தமாக அட்டவணை II (ஈ) 16ல் நெடும் பிரிவு 12ல் பயிர்விளைச்சலின்மையால் தவறிய கடன்கள் நீடிக்கப்பட்ட விவரங்கள் நீக்கப்பட்டுள்ளதான விவரங்களிலிருந்து தெளிவாக அறியப்படுகின்றது.

அட்டவணை II (ஈ) 16ல் உள்ள, பிரதேசங்களின்படியான அறவீடுகளின் பகுப்பாய்வு நுவரெலியா, கண்டி, பொலனறுவை, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மாத்தறைப் பகுதிகளிலே தன்விருப்பமான அறவீடுகள் உயர்ந்த மட்டத்தை அடைந்துள்ளமையையும், காலி, அம்பாறை, திரிகோணமலை, குருநாகல், புத்தளம், அநுராதபுரம் ஆகியவற்றிற் குறைவாக இருந்தமையையும் காட்டுகின்றது.

தன்விருப்பமான மீளக் கொடுப்பனவுகள் உயர்ந்த மட்டத்தை அடைய முடியாமலிருந்ததற்காய காரணங்கள் பின்வருமாறு:[1]

(அ) சில கமக்காரர்கள், இக்கடன்கள் அறுதியான நன்கொடைகளெனவும், எனவே அவை திருப்பிக் கொடுக்கப்படவேண்டியவையல்லவெனவும் கருதினர். 1958ம் ஆண்டிற்குமுன், வழங்கப்பட்டுத் திருப்பிக் கொடுக்கப்படாமல் இருந்த ரூபா 58 இலட்சம் கொண்ட தொகைகளுக்கு விவசாயச் சேவைத் திணைக்களத்தினால் மன்னிப்பு வழங்கப்பட்ட அண்மை அநுபவங்கள் இதற்குப் பெரிதளவு காரணமாகும். அன்றியும் முந்திய திட்டத்தின்கீழ் கிரமமாகவே தவறியுள்ளவர்களுக்கு அதற்குரிய காரணம் எதுவும் கருதப்படாது, 1967/68 பெரும்போகக் கடன்கள் வழங்கப்பட்டமையும் ஒரு காரணமாகும்.

(ஆ) சில கமக்காரர்கள் பணரீதியான மீளக் கொடுப்பனவிற்கெதிராக, அரிசிக் கூப்பன் புத்தகங்கள் மூலமாகக் கடன் மீளக் கொடுப்பனவைச் செய்வதற்கு விருப்பத்தையும் தெரிவித்தார்கள். இதற்கு, நெல் உத்தரவாத விலையிலும் கூடியதாகக் கொத்தொன்று ரூபா 1/-இல் அரிசிக் கூப்பன்கள் மதிப்பிடப்பட்டதே காரணமாக அமையும்.[2] மேலும், அரிசிக் கூப்பன் புத்தகமூலம் திருப்பிக் கொடுப்பனவு செய்வது நீண்டகாலயெல்லையிற் பரவப்பட்டிருந்தது. தூண்டுதலற்றதாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்ட அரிசிக் கூப்பன் மூலமான அறவீடு, உண்மையாக எதிர்மாறான விளைவை ஏற்படுத்தியிருக்கக் கூடும். எனினும், கடனாகப் பெறப்பட்ட மொத்தத் தொகை, அடுத்த போகத்திற் கடன் அளிக்கப்படமுன்னர் திருப்பிக் கொடுக்கப்படவேண்டுமென்பதால், இம்முறையான திருப்பிக் கொடுப்பனவு காலவரையின்றித் தாழ்த்திப்போட இயலாததாகும். குடும்பத்தின் அளவும், கூப்பன் புத்தகங்களின் எண்ணிக்கையும் திருப்பிக் கொடுப்பனவின் காலவரையை நிர்ணயிக்கும்.

(இ) கொடுகடன் வரைகளானது பிரதேசத் தேவைகளின் அடிப்படையிலில்லாது, தேசிய அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. சில பிரதேசங்களிற் கொடுகடனுக்கான தேவை இத்திட்டத்தின்கீழ்ப் பெறக்கூடிய தொகையிலும்பார்க்கக் குறைவாகவிருந்தமையால், ஏனைய தேவைகளுக்குக் கடன் எடுத்த நிதிகளை உபயோகிக்கும் போக்கு கமக்காரர்களிடையே காணப்பட்டது. வேறும் சில பிரதேசங்களில் உற்பத்தியின் எல்லை அதிகரிப்பு, சாதகமற்ற தொழில்நுட்ப அல்லது நிலைமைக் காரணிகளால் உள்ளிடுகையின் எல்லைச் செலவுகளின் அதிகரிப்புக்கு போதியனவாயிருக்கவில்லை. இந்நிலைமைக் காரணிகளுள் மேலதிகச் செலவிலிருந்து பெறப்பட்ட பலனிற் குறைவான பங்கினையே கமக்காரருக்கு அளிக்கத்தக்க திருப்திகரமற்ற குத்தகை நிபந்தனைகளும் உட்படும். இக்காரணி குளிர்ப்பிரதேசத்திலும், குறிப்பாக உயர்ந்த பிரதேசங்களிலும் முக்கியமாகக் காணப்பட்டது.

(ஈ) ஏனைய கடன் கொடுத்தவர்களுக்குரிய கடன்பாடுகள் உள்ள நிலையில், கடன்கொடுத்தோர் தமக்குரிய கடன்களைச் சூடுமிதிக்கும்போது சேகரிப்பதனாற் கமக்காரர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குத் திருப்பிக் கொடுப்பதற்குப் போதுமான கைமிச்சத்தை வைத்திருக்க முடிவதில்லை.

---

1. இத்தகவல் மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட தவறுகையின் பேரிலான அளவையிலிருந்து பெறப்பட்டு, மக்கள் வங்கியிடமிருந்தும், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்தும் பெறப்பட்ட தகவலால் துணை செய்யப்பட்டது.
2. ஒரு கொத்திற்கு ரூ. 1/- என்ற வீதத்தில் ரூ. 16.00 கொண்ட உத்தரவாதத்திட்ட விலைக்கு எதிராக, ஒரு புசல் நெல்லின் பெறுமதி ரூ. 15.60ஆக இருந்தது.

## அட்டவணை II (ஈ) 16

### மாவட்டவகைப்படி, கடன்கள் அறவீடுகள், நீடிப்புகள், தவறுகளின் பகுப்பாய்வு — பெரும்போகம் 1967/68 (நெல்)

| | அங்கீகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (1) | சங்கங்களால் உபயோகிக்கப்பட்ட தொகை (2) | சங்கங்களால் இணக்கமாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை (3) | அரிசிக்கூப்பன் புத்தகங்களின் திருப்பிக்கொடுக்கப்பட்ட தொகை (4) | திருப்பிக்கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை (5) | நீடிக்கப்பட்ட கடன்கள் (6) | தவறுகையிலுள்ள தொகை (7) | (2) (8) இன் சதவீதமாக (4) உபயோகிக்கப்பட்ட தொகையின் சதவீதமாக இணக்கமாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை (8) | (2) (9) இன் சதவீதமாக (4) உபயோகிக்கப்பட்ட தொகையின் சதவீதமாக கூப்பன் புத்தகங்களிற் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை (9) | (6) (7) (10) அறவீடுகளின் மொத்தச் சதவீதம் (10) | (2) (11) சதவீதமாக (6) உபயோகிக்கப்பட்ட தொகையின் சதவீதமாக நீடிக்கப்பட்ட கடன்கள் (11) | (12) (2) இன் சதவீதமாக (7) சங்கங்களால் உபயோகிக்கப்பட்ட தொகையின் சதவீதமாக தவறுகையிலுள்ள தொகை (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆயிரம் ரூபாய்களில் | | | | | | | சதவீதமாக | | | | |
| கொழும்பு-களுத்துற | 690 | 485 | 373 | 11 | 384 | — | 101 | 76.9 | 2.3 | 79.2 | — | 2.08 |
| கண்டி ... | 2404 | 2014 | 1853 | 47 | 1900 | 4 | 110 | 92.0 | 2.3 | 94.3 | 0.2 | 5.5 |
| மாத்தளை ... | 1075 | 834 | 628 | 155 | 783 | — | 51 | 75.3 | 18.6 | 93.9 | — | 6.2 |
| நுவரெலியா ... | 479 | 438 | 413 | 9 | 422 | — | 16 | 94.3 | 2.0 | 96.3 | — | 3.7 |
| காலி ... | 2485 | 1836 | 848 | 1 | 849 | 103 | 884 | 46.2 | — | 46.2 | 5.6 | 48.1 |
| மாத்தறை ... | 1695 | 1400 | 1163 | 44 | 1207 | 234 | — | 83.1 | 3.1 | 86.2 | 16.7 | — |
| அம்பாந்தோட்டை ... | 3605 | 3124 | 2301 | 403 | 2704 | 149 | 271 | 73.7 | 12.9 | 86.6 | 4.8 | 8.7 |
| யாழ்ப்பாணம் ... | 3990 | 3438 | 3089 | 225 | 3314 | 42 | 82 | 89.8 | 6.6 | 96.4 | 1.2 | 2.4 |
| மன்னார் ... | 3453 | 2794 | 2393 | 119 | 2512 | 9 | 273 | 85.6 | 4.3 | 89.9 | 0.3 | 9.8 |
| வவுனியா ... | 4279 | 4279 | 3324 | 468 | 3792 | 148 | 339 | 77.7 | 10.9 | 88.6 | 3.5 | 7.9 |
| மட்டக்களப்பு ... | 6688 | 5246 | 3897 | 675 | 4572 | — | 674 | 74.3 | 12.9 | 87.2 | — | 12.8 |
| அம்பாறை ... | 9339 | 5817 | 3175 | 721 | 3896 | — | 1921 | 54.6 | 12.4 | 67.0 | — | 33.0 |
| திருகோணமலை ... | 4523 | 4079 | 2227 | 1025 | 3252 | — | 827 | 54.6 | 25.1 | 79.7 | — | 20.3 |
| குருநாகல் ... | 7866 | 6263 | 3564 | 73 | 3637 | 248 | 2378 | 56.9 | 1.2 | 58.1 | 3.9 | 38.0 |
| புத்தளம் ... | 2036 | 1529 | 731 | 108 | 839 | 298 | 392 | 47.8 | 7.1 | 54.9 | 19.5 | 25.6 |
| அநுராதபுரம் ... | 12001 | 8701 | 4852 | 146 | 4998 | 259 | 3444 | 55.8 | 1.6 | 57.4 | 3.0 | 39.6 |
| பொலனறுவை ... | 5512 | 4528 | 4093 | 51 | 4144 | 33 | 351 | 90.4 | 1.1 | 91.5 | 0.7 | 7.8 |
| வதுளை ... | 2078 | 1472 | 1255 | 77 | 1332 | — | 140 | 85.3 | 5.2 | 90.5 | — | 9.5 |
| மொனருகல ... | 1613 | 1103 | 869 | 46 | 915 | — | 188 | 78.7 | 4.2 | 83.0 | — | 17.0 |
| இரத்தினபுரி ... | 1641 | 1397 | 1099 | 121 | 1220 | 58 | 119 | 78.7 | 8.6 | 87.3 | 4.2 | 8.5 |
| கேகாலை ... | 742 | 635 | 452 | 63 | 515 | 84 | 36 | 71.2 | 9.9 | 81.1 | 13.2 | 5.7 |
| மொத்தம் ... | 78,158 | 61,412 | 42,599 | 4,588 | 47,187 | 1,669 | 12,597 | 69.4 | 7.4 | 76.8 | | |

மூலங்கள்: மக்கள் வங்கி,
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
விவசாய, உணவு அமைச்சு.

இத்தொகைகள் 30. 10. 68ல் உள்ளபடி களுத்துறை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகியவற்றிற்கான தொகைகள் கிடைக்கவில்லை.

(உ) சில கூட்டுறவுச் சங்கங்கள், சங்கத்தின் வியாபார முயற்சிகளுக்கான ஒப்பந்த வேலைபோன்ற ஏனைய நோக்கங்களுக்கும் நிதிகளை உபயோகித்த சந்தர்ப்பங்களுமுள. உறுப்பினர்களால் உபயோகிக்கப்படாத அல்லது அவர்களாற் சங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகள் அத்தகைய நோக்கங்களுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளன. சங்கத்தின் திரவத்தன்மையற்ற நிலையாலோ நிதிகள் உபயோகிக்கப்பட்ட தேவைகளின் இலாபமற்ற தன்மையாலோ இந்நிதிகள் வங்கிக்குத் திருப்பிக் கொடுக்கப்படவில்லை.[1]

(ஊ) கூட்டுறவுச் சங்கங்களாற் கொடுக்கப்பட்ட கடன்களின்மேற் போதுமானளவு மேற்பார்வையில்லாதமை, இத்திட்டத்தின் பிரதான குறைகளிலொன்ருகும். இக்குறை, முன்பு கூறப்பட்ட பல குறைபாடுகளுக்குப் பொறுப்பானதாகும்.

தற்போதைய ஒழுங்கு முறைகளின்கீழ் தவறிய கடனில், எழுபத்தைந்து சதவீதமான தொகையில் மொத்தக் கடன் நிதியில் அரைச் சதவீதமான உத்தரவாதக் கட்டணம் குறைக்கப்பட்ட தொகை, மக்கள் வங்கியினுலன்றி அரசாங்கத்தினுற், பொறுக்கப்படுகின்றது. 1968 திசெம்பர் இறுதியில் உள்ளபடி, 1967/68 பெரும்போகத்திற்கான திட்ட நிறைவேற்றலின்பேரில் அரசாங்கத்தினுற் பொறுக்கப்பட்ட தொகை 80 இலட்சம் ரூபாய்களாகும். இது, கடனுக விநியோகிக்கப்பட்ட 614.1 இலட்சத்திலிருந்து ஏற்பட்டதாகும். ஆனல் இத்தொகை அரிசிக் கூப்பன் புத்தகங்கள் மூலமாக, மேலும் அறவிடப்பட்ட தொகைகளும் தன்விருப்பமான அறவீடுகளும் காலப்போக்கில் வரவுவைக்கப்படும்போது குறையும்.

## 1968 சிறுபோகம் — நெற்கடன்கள்

1968 சிறுபோகத்திற்கு அநுமதிக்கப்பட்ட கடன்களினதும், உபயோகிக்கப்பட்ட தொகைகளினதும் அளவு 1967/68 பெரும்போகத்திலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவு குறைந்ததாகும். 1968 சிறுபோகத்திற் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1967/68 பெரும்போகத்திலும் அரைவாசியிலும் சிறிது கூடுதலாகவிருந்தபோதிலும், அநுமதிக்கப்பட்டு, உபயோகிக்கப்பட்ட கொடுகடன் தொகை, 1967/68 பெரும்போகத்தின் தொடர்பான தொகையின் ஐந்திலொன்றிலும் குறைவானதாகும்.

இக் குறிப்பிடத்தக்க குறைவிற்குப் பல காரணங்களுள. முந்திய தவறுகைகளுக்குக் கொடுக்கப்பட்ட மன்னிப்பு, 1967/68 பெரும்போகத்திற் கடன் பெறுதற்குத் தகுதியும், விருப்பமுமுள்ள ஆட்களை அதிகரிக்கச் செய்திருக்கையில், 1968 சிறுபோகத்தில், 1967/68 பெரும்போகத்தின் தவறுநர்கள் கடன் பெறுதற்குத் தகுதியற்றவர்களாகவும், ஏனைய சிலர், அரிசிக் கூப்பன் புத்தகங்களை அடமானம் வைக்கவேண்டிய காரணத்தினுல் அதை விரும்பாமல் உள்ளமையாலும் இருந்திருக்கக்கூடும். பல கடன்பெறுநர்கள், கடன் முழுவதும் திருப்பிக் கொடுக்கப்படும்வரை அரிசிக் கூப்பன் புத்தகங்களின் ஒப்படைத்தலை அரசாங்கம் வற்புறுத்துமென எதிர்பார்க்கவில்லை. பொதுவாக, கமக்காரர்கள் சிறுபோகப் பருவகாலத்தைத் தமது உச்ச திரவநிலையிலே தொடங்கினராதலாற் சிறுபோகத்திற் கொடுகடன் தேவை குறைவாகவிருந்தது. இப்பொது அம்சம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அறியத்தரப்பட்ட பெரிதும் சாதகமான பெரும்போகப் பயிர்விளைச்சலினுல், 1968 சிறுபோகத்தில் அது பலமாகவிருந்தது.

அறவிடப்பட்ட மட்டம் குறிப்பிடத்தக்களவில் மிகவும் திருப்திகரமானது. சங்கங்களால் உபயோகிக்கப்பட்ட ரூபா 110.5 இலட்சத்தில் ரூபா 62.8 இலட்சம் அல்லது 56.9 சதவீதமான தொகை 1968[2] திசெம்பர் இறுதிவரை மீளப் பெறப்பட்டது. வரவேண்டிய மொத்தத் தொகையான ரூபா 47.0 இலட்சம் ரூபாய்களில் 6.7 இலட்சம் ரூபாய்கள் அல்லது கடன்

---

1. உதாரணமாக திருகோணமலை, மாவட்ட 69 கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து ஏற்கனவே மீளப் பெறப்பட்டதான ரூ. 263,400ஐ திருப்பிக்கொடுக்கத் தவறிவிட்டன.
2. 1969 சனவரி இறுதியில், தன்விருப்பமான அறவீடுகளின் தொகை, செலவழிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் 76.8 இலட்சம் ரூபாய்களுக்கு அல்லது 6.8 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. இத்தேதியில் உள்ளபடியான மேலதிக நிலுவைத் தொகை, செலவழிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் 8.9 இலட்சம் ரூபாய்கள் அல்லது 9 சதவீதமாகும்.

வழங்கப்பட்ட மொத்த நிதியில் 6 சதவீதமானவை மட்டுமே மேலதிகமாக வரவேண்டிய தொகையாகும். தவறுகைகள் முக்கியமாக மாத்தறை, அம்பாந் தோட்டை ஆகிய இரு மாவட்டங்களிலேயே செறிந்து காணப்பட்டன. இப்பகுதியிற் தவறிய தொகை 6.2 இலட்ச ரூபாய்களாகும். மாத்தறையிலுள்ள இத்தவறுகை உபயோகிக்கப்பட்ட நிதிகளின் 37 சதவீதத்தைக் கொண்டதாகும். இது, குறிப்பாக நில்வளகங்கை நதிக்கரையில் அடிக்கடி ஏற்பட்ட வெள்ளச் சேதத்தாலேயே ஏற்பட்டதாகும். இதுவரை கிடைத்த அறிகுறிகளின்படி, அறவீடுகளின் மட்டம் 1967/68 பெரும்போகத்திலும் பார்க்க உயர்வானதாகத் தெரிகின்றது.

**1968/69 பெரும்போகம் — நெற்கடன்கள்**

ஏக்கரொன்றிற்கு வழங்கப்பட்ட கடன்களின் தொகை, 1968/69 பெரும்போகம் தொடக்கம் ஏக்கரொன்றிற்கு ரூபா 220/-லிருந்து ரூபா 262/-ற்கு அதிகரிக்கப்பட்டது. இத்திருத்தியமைப்பு, உரம், உழவு ஆகியவற்றின் செலவுவீதங்கள் அதிகரித்தமையினுலேற்பட்டதாகும். அறுவடைக்குரிய ரூபா 25/- கொண்ட கடன் நீக்கப்பட்டது. ஆனுல் கிருமிநாசினிக்கான ரூபா 25/- கடன் புகுத்தப்பட்டது. இக்கடனும், மூன்று தவணைகளில் அனுமதிக்கப்படும் முதலாவது தவணைப் பணம் பயிரிடுகைத் தொடக்கத்தில் பணமாகக் கொடுக்கப்படும். இரண்டாவது தவணைப் பணம் விநியோகிக்கப்பட்ட உரத்திற்காக விவசாயச் சேவை ஆணையாளருக்கு நேராகக் கொடுக்கப்படுகையில், மூன்ருவது தவணைப் பணம், சங்கத்தின் விண்ணப்பம் கூட்டுறவுப் பரிசோதனையாளரால் விதந்துரைக்கப்பட்டு மூன்று வாரங்களிற்குப் பின் பணமாகக் கொடுக்கப்படும். நோக்கத்தின்படியும், தவணைகளின்படியும் அனுமதிக்கப்பட்ட தொகைகள், கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஈ) 17

அனுமதிக்கப்பட்ட தவணை, நோக்கத்தின்படியான ஏக்கரொன்றிற்குரிய கடனெல்லை

| 1ஆந் தவணை | நோக்கம் | ஏக்கரொன்றிற்கு | |
|---|---|---|---|
| | விதைநெல் | 32.00 | |
| | உழவு | 60.00 | |
| | கிருமிநாசினிகள் | 25.00 | |
| | 1ஆந் தவணை மொத்தம் | | 117.00 |
| 2ஆந் தவணை | உரம் | 95.00 | |
| | 2ஆந் தவணை மொத்தம் | | 95.00 |
| 3ஆந் தவணை | | | |
| | கையாற் களைபிடுங்கல் | 25.00 | |
| | நாற்றுநடுகை அல்லது வரிசை நடுகை | 25.00 | |
| | 3ஆந் தவணை மொத்தம் | | 50.00 |
| | சகல தவணைகளுக்குமான மொத்தம் | | 262.00 |

## அட்டவணை *II* (ச) 18

### உப பயிர்களுக்கான கடன்களின் விதமும், நிபந்தனைகளும்

| பயிர் | வீதம் | கடன்களின் காலம் | நோக்கம், பணம் அல்லது வகை அடிப்படையிலான பகுப்பு |
|---|---|---|---|
| மிளகாய் (மழை) | ஏக்கரொன்றிற்காக ரூ. 125/– ஆகக்கூடியது 5 ஏக்கர்கள் | 270 | பணத்தில்<br>(அ) உழுதலும் நிலத் தயாரிப்பும் ... 40.00<br>(ஆ) மாற்று நடுகை ... 50.00<br>90.00<br><br>பண்ட வகையில்<br>உரமும் அக்ரோ இரசாயமும் ... 35.00 |
| மிளகாய் (நீர்ப் பாய்ச்சப் பட்டது) | ½ ஏக்கருக்கு ரூ.200/– ஆகக்கூடியது 5 ஏக்கர்கள் | 270 | பணத்தில்<br>(அ) உழுதல், நிலத்தயாரிப்பு, மாற்று நடுகை, களைபிடுங்கள் ...150.00<br><br>பண்ட வகைகளில்<br>உரமும் அக்ரோ இரசாயனங்களும் 50.00 |
| வெங்காயம் | ½ ஏக்கருக்கு ரூ. 200/– ஆகக்கூடியது 5 ஏக்கர்கள் | 180 | பணத்தில்<br>விதை வெங்காயம் ...100.00<br><br>பண்ட வகையில்<br>உரம், அக்ரோ இரசாயனவைகள் 100.00 |
| பம்பாய் வெங்காயம் | ½ ஏக்கருக்கு ரூ. 200/– ஆகக்கூடியது 5 ஏக்கர்கள் | 210 | பணத்தில்<br>விதைகளும் நாற்றுகளும் ...100.00<br><br>பண்ட வகைகளில்<br>உரம் or அக்ரோ இரசயானங்கள் 100.00 |
| உருளைக் கிழங்கு | ⅛ ஏக்கருக்கு ரூ 175/- தொடக்கத்தில் ⅛ ஏக்கருக்கும் படிப்படியாக பருவகாலத்திற்கு ⅛ குறைப்பு. ஆகக்கூடியது 5 ஏக்கர்களுக்கு அதிகரிக்கப்பட்டது. | 180 | பணத்தில்: கூலிச் செலவுகள் ... 20.00<br><br>பண்ட வகைகளில் or பணத்தில்<br>விதை உருளைக் கிழங்கு (2 அந்.) 134.40<br><br>பண்ட வகை<br>உரம் (1 அந்தர்) ... 20.00<br>ரூபா 175.00 |

மரக்கறிகள்–ஆகக்கூடியது ஓர் ஏக்கருக்கு

| பிரதேசம் | ரூ. |
|---|---|
| நுவரெலியா | 1000/– |
| வதுளை, வெலிமடை, கண்டி, மாத்தளை | 750/– |
| நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் | 650/– |
| இரத்தினபுரி | 600/– |
| குருநாகல் | 500/– |
| ஏனைய பரப்பு | 500/– |

| | |
|---|---|
| லிக்ஸ் | 240/– |
| அவரை | 90/– |
| ஏனைய மரக்கறி வகைகள் | 150/– |

பயிருடன் வேறுபடுகின்றது.

மூலம்: மக்கள் வங்கி.

ஏக்கரொன்றிற்குக் கொடுக்கப்பட்ட தொகை அதிகரித்தபோதிலும், 1968/69 பெரும்போகத்திற்கு வழங்கப்பட்ட நிதிகளின் மொத்தத் தொகை, 1967/68 பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில், குறைவுற்றுள்ளது. 1968 திசெம்பர் இறுதியிலுள்ளபடி அநுமதிக்கப்பட்ட 514 இலட்சம் ரூபாய்களில் 363 இலட்சம் ரூபாய்கள் உபயோகிக்கப்பட்டன. இது, நடைமுறைப் பெரும் போகக் காலத்திற் கடன்களால் உதவிபுரியப்பட்ட நிலப்பரப்பு, 1967/68 பெரும்போகத்திற் கடன்களால் உதவிசெய்யப்பட்ட நிலப்பரப்பின் கிட்டத் தட்ட 70 சதவீதத்தைக் கொண்டுள்ளதென்பதைத் தெரிவிக்கின்றது. இம் மதிப்பீடு இரு ஊகிப்புக்களின்படி தீர்மானிக்கப்பட்டதாகும். முதலாவது, அநுமதிக்கப்பட்ட சகல நிதிகளும் இறுதியில் உபயோகிக்கப்படும் என்பதும்; இரண்டாவது, ஏக்கரொன்றிற்கு உபயோகிக்கப்பட்ட நிதிகளின் தொகை 1967/68 பெரும்போகத்தினதுபோலவே, 1968/69 பெரும்போகத்திலும் அதே சமவீதத்தைக் கொண்டதாயிருக்கும் என்பதுமாகும். இவ்வீழ்ச்சி, தவறுநர்களுக்குக் கடனளிக்காது தடுத்து வைத்திருந்ததாலேயே முக்கியமாக ஏற்பட்டதாகும். வெற்றியீட்டிய சில கமக்காரர்கள், பயிரிடுகைக்குத் தமது சொந்த நிதிகளை உபயோகிக்கக்கூடியளவு நிதிச் சுதந்திரம் அடைந்திருக்கவும் கூடும்.

1968 திசெம்பர் இறுதியில், கடனாக வழங்கப்பட்ட நிதிகளில் 7.9 இலட்சம் ரூபாய்கள் அல்லது 2.2 சதவீதமானவை அறவிடப்பட்டன.

**உப பயிர்கள்**

இத்திட்டத்தின்கீழ், மரக்கறிவகைகள், மிளகாய், வெங்காயம், பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்குகள் ஆகியன பயிரிடுவதற்கும் கடன் வழங்கப் பட்டது. வழங்கப்பட்ட தொகை, திருப்பிக் கொடுக்கப்படவேண்டிய காலப் பகுதி, கடனின் நோக்கம், பயிருக்குப் பயிர் வேறுபடத்தக்கது. மரக்கறிவகைகள் பயிரிடுகைக்கான கடன்கள் விடயத்தில், கடனளிக்கப் படும் தொகை பயிரிடப்பட்ட இடத்தின் படியும், வேறுபடும். எனினும், நெற்கடன்கள் விடயத்தைப்போலன்றி, குறிப்பிட்டு வேண்டப்பட்டாலன்றி கடன்தொகைகள் தவணைகளில் வழங்கப்படமாட்டா. உபபயிர்களுக்கும் கொடுக்கப்பட்ட தொகையும், அவை கொடுக்கப்பட்ட நோக்கமும் அட்ட வணை *II* (ஈ) 18இற் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

1967 ஒற்றோபர் 1ஆந் தேதி தொடக்கம் 1968 திசெம்பர் 31ஆந் தேதி வரையான காலப்பகுதியில் ரூபா 88.4 இலட்சம் உப பயிர்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கடன்தொகை பயிர்களின்படியாகப் பகுக்கப் பட்டு, கீழுள்ள அட்டவணை 19இலே தரப்பட்டுள்ளது.

*அட்டவணை II (ஈ) 19*

*பயிர்களின்படி பகுக்கப்பட்ட உப பயிர்களுக்கான கடன்கள்*
*(1967 ஒற்றோபர் 1ஆந் தேதியிலிருந்து 1968 திசெம்பர் 31ஆந் தேதி வரை.)*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பயிர் | தொகை ஆ. ரூ. | மொத்த சதவீதம் |
|---|---|---|
| வெங்காயம் ... ... ... ... | 3,412 | 38.6 |
| மிளகாய் ... ... ... ... ... | 2,674 | 30.2 |
| உருளைக்கிழங்கு ... ... ... ... | 2,158 | 24.4 |
| மரக்கறி வகைகள் ... ... ... ... | 593 | 6.7 |
| பம்பாய் வெங்காயம் ... ... ... | 5 | 0.1 |
| | 8,842 | 100.0 |

மூலம்: மக்கள் வங்கி.

உப பயிர்களுக்கான தன்விருப்ப மீட்பு மட்டம் 68.4 சதவீதமாக அமைந்து, நெற்கடன்களுக்குள்ள தன்விருப்ப மீளக் கொடுப்பனவு மட்டத்தினளவிலேயே இருந்தது. தவறுநர்களின் அரிசிக்கூப்பன் புத்தகங்கள் தடுத்து வைக்கப்படுதல், உப பயிர்களின் விடயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை. உப பயிர்களுக்கான கடன்களும், அறவீட்டு நிலையும் அட்டவணை II (ஈ) 20இற் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஈ) 20

உப பயிர்களுக்கான கடன்களும் அறவீடுகளும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1.10.67விருந்து 30.9.68 வரையும் வழங்கப்பட்ட கடன்கள் | 1.10.68விருந்து 31.12.68 வரையும் வழங்கப்பட்ட கடன்கள் |
|---|---|---|
| வழங்கப்பட்ட தொகை .. .. | 5.59 | 3.20 |
| அறவிடப்பட்ட தொகை .. .. | 3.83 | 0.02 |
| தவறுகையிலுள்ள தொகை .. .. | 1.07 | — |
| வெளிநின்ற தொகை (தவறுகையில் இல்லாதவை) .. .. | .69 | 3.20 |
| அறவீடுகளின் சதவீதம் .. .. | 68.4% | — |
| தவறுதலாயின் சதவீதம் .. .. | 19.1% | — |
| வெளிநிற்கும் சதவீதம் .. .. | 12.5% | — |

மூலம் : மக்கள் வங்கி.

நெற்கடன்கள் விடயத்தில் மாவட்ட வகையான நிலைமை பரந்த வேறுபாடுகளைக் காட்டுகின்றது. உதாரணமாகக் கழுத்தறை, மொனருகலை, பொலனறுவை மாவட்டங்களில் எல்லாக் கடன்களும் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கையில், யாழ்ப்பாணத்தில் 92.4 சதவீதமானவை திருப்பிக் கொடுக்கப்பட்டன. 70 சதவீதத்திற்கு மேலான குறிப்பிடத்தக்க அறவீடுகள், கொழும்பு, கண்டி மாவட்டங்களிற் செய்யப்பட்டன. மறுபக்கத்தில், 25 சதவீதத்திற்குக் குறைந்த அறவீடுகள் எட்டு மாவட்டங்களிற் செய்யப்பட்டன. மாவட்டங்களின்படியான உப பயிர்களின் செயலாற்றலுடன் அறவீட்டு வீதத்தை ஒப்பாய்வதற்கு, கிடைக்கப்பெற்ற தரவுகளின் பற்றுத்தன்மையால் இயலாமல் இருக்கின்றது. மேலும், பண்டவகைப்படியான அறவீட்டு எண் விபரங்கள் இல்லாதமையால், சில பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களிற்கும், தவறுகை வீதத்திற்கும் இடையேயான நேரடித் தொடர்பு அறிந்து கொள்ளமுடியாமலிருக்கின்றது. மாத்தளை, அம்பாறை, அநுராதபுரம் ஆகிய இடங்களிற் சகல தவறுகைகளும், அம்பாந்தோட்டை, குருநாகல், புத்தளம் ஆகிய இடங்களிற் குறிப்பிடத்தக்களவு தவறுகை வீதமும், மிளகாய் பயிரிடுகைக்குக் கொடுக்கப்பட்ட கடன்களிலேயே உள்ளதாகும். நெற்கடன்களினதும், உப பயிர்களினதும் மாவட்ட வகைப்படியான அறவீட்டு மட்டங்கள், ஒரே தன்மையாக இருந்து, கடன் செலவழிக்கும் முகவராண்மையினரான கூட்டுறவுச் சங்கங்களினது அடிப்படைக் குறைபாட்டைப் பிரதிபலிக்கின்றன. 1967 ஒற்றோபர் 1ஆந் தேதிக்கும் 1968 செத்தெம்பர் 30ஆந் தேதிக்கும் இடையிற் கொடுக்கப்பட்ட கடன்களின் மாவட்ட வகைப்படியான பகுப்பு, அட்டவணை II (ஈ) 21இலே தரப்பட்டுள்ளது.

பொருளாதார ஆராய்ச்சித் திட்டத்தின் பகுதியாக, மத்திய வங்கியானது, கிராமத் துறைக் கடன் தேவைகள், கடன்பாடுகள் ஆகியவற்றின் பேரில் தரவுகளைப் பெறுவதற்கென குறிப்பாக அதற்கென, புள்ளிவிபர அளவைகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

அட்டவணை II (ஈ) 21

**1.9.67 — 30.9.68 காலப்பகுதியில் உப உணவுப் பயிர்களுக்காக வழங்கப்பட்ட கடன்களின் மாவட்ட வகைப்படியான பகுப்பு**

| மாவட்டம் | மிளகாய் (1) | வெங்காயம் (2) | உருளைக்கிழங்கு (3) | மரக்கறிவகைகள் (4) | வழங்கப்பட்ட மொத்தத் தொகை (5) | அறவிடப்பட்ட தொகை (6) | தவறுகையிலுள்ள தொகை (7) | வரவேண்டிய ஆனால் தவறுகையில் வந்த தொகை (8) | (5) (10) இன் வீதமாக (6) வழங்கப்பட்ட மொத்தத் தொகை (9) | (5) (10)இன் வீதமாக (6) வழங்கப்பட்ட மொத்தத் தொகையின் வீதமாக தவறுகையிலுள்ள தொகை (10) | (5) (11) இன் வீதமாக (8) வழங்கப்பட்ட மொத்தத் தொகையில் வீதமாக வரவிலிருக்கும் ஆனால் தவறுகையிலில்லாத தொகை 1) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நூறு ரூபாய்களில் | | | | | | | | சதவீதம் | | |
| கொழும்பு ... ... | — | — | — | 50 | 50 | 38 | 12 | — | 76.0 | 24.0 | — |
| களுத்துறை ... ... | — | — | — | 158 | 158 | 158 | — | — | 100.0 | — | — |
| கண்டி ... ... | 46 | — | — | 992 | 1,038 | 794 | 64 | 180 | 76.4 | 6.2 | 17.4 |
| மாத்தளை ... ... | 37 | — | — | — | 37 | 9 | — | 28 | 24.3 | — | 75.7 |
| நுவரெலியா ... ... | — | — | 373 | — | 1,348 | 901 | 154 | 293 | 66.8 | 11.4 | 21.8 |
| காலி ... ... | — | — | — | 198 | 198 | 46 | 152 | — | 23.2 | 76.8 | — |
| மாத்தறை ... ... | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| அம்பாந்தோட்டை ... ... | 1,885 | 241 | — | — | 2,126 | 440 | 788 | 989 | 20.6 | 37.1 | 42.3 |
| யாழ்ப்பாணம் ... ... | 6,732 | 18,427 | 2,260 | — | 27,419 | 25,346 | 1,681 | 455 | 92.4 | 5.9 | 1.7 |
| மன்னார் ... ... | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| வவுனியா ... ... | 437 | 3 | 10 | — | 450 | 88 | 147 | 215 | 19.5 | 32.7 | 47.8 |
| மட்டக்களப்பு ... ... | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| அம்பாறை ... ... | 285 | — | — | — | 285 | 94 | 159 | 32 | 32.9 | 55.9 | 11.2 |
| திருகோணமலை ... ... | 480 | 484 | — | — | 964 | 502 | 171 | 291 | 52.0 | 17.7 | 30.3 |
| குருநாகல் ... ... | 924 | 18 | — | 20 | 962 | 144 | 469 | 349 | 14.9 | 48.7 | 36.4 |
| புத்தளம் ... ... | 3,713 | 56 | — | 84 | 3,853 | 261 | 3,134 | 259 | 11.9 | 81.3 | 6.8 |
| அநுராதபுரம் ... ... | 4,156 | — | — | — | 4,156 | 763 | 3,388 | — | 18.4 | 81.6 | — |
| பொலநறுவை ... ... | 123 | — | — | — | 123 | 123 | — | — | 100.0 | — | — |
| பதுளை ... ... | 265 | 50 | 9,402 | 1,684 | 11,401 | 7,865 | 380 | 3,156 | 68.9 | 3.3 | 27.8 |
| மொனராகலை ... ... | 274 | — | — | — | 274 | 274 | — | — | 100.0 | — | — |
| இரத்தினபுரி ... ... | 308 | 690 | — | 96 | 1,094 | 240 | 49 | 805 | 21.9 | 4.5 | 73.6 |
| கேகாலை ... ... | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| மொத்தம் ... ... | 19,615 | 19,969 | 12,045 | 4,257 | 55,936 | 38,291 | 10,685 | 6,960 | 68.4 | 19.1 | 12.5 |

மூலம் : மக்கள் வங்கி.

### 3. சேமிப்புத் தாபனங்களும், நீண்டகாலக் கொடுகடன் தாபனங்களும்

அரசாங்க ஆதிக்கமுள்ள சேமிப்பு நிலையங்களாலும், கடன்வழங்கும் நிலையங்களாலும் செய்யப்பட்ட கடன்வழங்கும் தொழிற்பாடுகளை அட்டவணை *II* (ஈ) 15 காட்டுகின்றது.

அட்டவணை *II* (ஈ) 22

நீண்டகாலக் கொடுகடன் நிலையங்களினது கடன் வழங்கும் தொழிற்பாடுகள்

ஆயிரம் ரூபாய்களில்

| | 1965 | | 1966 | | 1967 | | 1968 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப்பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப்பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப்பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை |
| அபிவிருத்திநிதிக் கூட்டுத் தாபனம் (அ) | 4,010 | 28,316 | 4,540 | 29,052 | 3,150 | 29,154 | 7,273 | 31,716 |
| இலங்கைச்சேமிப்பு வங்கி | 2,845 | 16,366 | 2,249 | 16,371 | 3,880 | 17,715 | 4,376 | 19,943 |
| கமத்தொழிற் கைத்தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனம் ... | 4,941 | 32,424 | 3,933 | 32,367 | 2,565 | 31,119 | 3,285 | 30,288 |
| அரசாங்க ஈட்டு வங்கி... | 3,942 | 54,681 | 4,959 | 55,319 | 4,812 | 55,453 | 6,623 | 57,816 |
| கடன் சபை ... ... | 540 | 11,411 | 833 | 10,970 | 1,225 | 11,047 | 1,076 | 10,758 |
| தேசிய வீடமைப்புத் திணைக்களம் (ஆ) | 5,138 | 71,536 | 16,861 | 84,196 | 25,585 | 105,485 | 14,355 | 113,960 |
| மொத்தம் ... ... | 21,416 | 214,734 | 33,375 | 228,275 | 41,217 | 249,973 | 36,998 | 264,481 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) ஒப்புரவு முதலீட்டங்களையும் உட்படுத்தும்.

(ஆ) எண்தொகைகள் ஒற்ரோபர் / செத்தெம்பர் நிதியாண்டுக்குரியனவையாகும். வழங்கப்பட்ட கடன்களின் எண்தொகைகள் தனியாட்களுக்கும் கட்டடச் சங்கங்களுக்கும் வழங்கிய கடன்களை மட்டுமே பிரதிபலிக்கின்றன. 1965–68 ஆண்டுகளுக்குரிய வெளிநின்ற தொகைகள் கட்டடச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை நீக்குவனவாகும்.

இவ்வெண்தொகைகளுக்கும் முந்திய ஆண்டறிக்கைகளில் வெளியிடப்பட்ட தொடர்பான எண்தொகைகளுக்குமிடையிலுள்ள வேறுபாடுகள், திருத்தங்களினலாகும்.

1966ஆம், 1967ஆம் ஆண்டுகளின் விரிவான போக்கிற்கெதிராகச் சேமிப்பு, நீண்டகாலக் கொடுகடன் நிலையங்களினது மொத்தக் கடன் வழங்கல் 1968இல் 42 இலட்சம் ரூபாய்களால் சுருக்கமடைந்தது. இது, தேசிய வீடமைப்புத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடன்களில் ஏற்பட்ட கூரிய வீழ்ச்சியினலும், ஏனைய நீண்டகாலக் கொடுகடன் நிலையங்களினல் வழங்கப்பட்ட கடன்களின் சிறிதளவு அதிகரிப்புக்களினலுமாகும்.

கடன்முறிகளை வெளியிடுவதன்மூலம் தேசிய வீடமைப்புத் திணைக்களம் பெற்ற வளங்கள், முந்திய ஆண்டுகளிலும்பார்க்கப் பெரிதளவில் அதிகரித்திருந்தபொழுதும், அதனல் வழங்கப்பட்ட கடன்களிலேற்பட்ட 112 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கூரிய வீழ்ச்சி இத்திணைக்களத்தினது சொந்தக் கட்டடத் தொழிற்பாட்டில் ஏற்பட்ட பெரிய அதிகரிப்பினலாகும். இச்செலவுகளின் எண்தொகைகள் மேலேயுள்ள அட்டவணையிற் சேர்க்கப்படவில்லை.

ஏனைய தாபனங்களால் வழங்கப்பட்ட கடன்களில் ஏற்பட்ட பொதுவான அதிகரிப்புக்களில் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட கடன்கள் 1967இல் வீழ்ச்சியுற்றிருந்தமைக்கெதிராக 1968இற் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டின. இக்காலப்பகுதியில் இக் கூட்டுத்தாபனத்தின் வளங்கள் சர்வதேசப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட $40 இலட்சம் கொண்ட கொடுகடன் வசதிகளிற் பல முற்றிருந்தது. இக் கொடுகடன் வசதிகளின்கீழ் நிதியீட்டப்பட்ட இறக்குமதிகள் அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்ட விதிகளிலிருந்து விலக்குப் பெற்றிருந்தபோதும், அவைகளின்மீது 20 சதவீத அனுமதிச் சீட்டுக்கட்டணம் விதிக்கப்பட்டது. இக்கூட்டுத்தாபனம், மத்திய வங்கியினது நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மீள நிதியீட்டல் வசதிகளையும் பயன்படுத்திற்று.

தேசிய ஈட்டு வங்கியினால் வழங்கப்பட்ட கடன்தொகையில் ஏற்பட்ட 18 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பு, மே மாதத்திற் கொண்டு வரப்பட்ட சட்டத்தினால் அதனது அதிகாரங்களும் கடன்வழங்கும் கால யெல்லைகளும் விரிவாக்கப்பட்டதனாலாகும். இலங்கைச் சேமிப்பு வங்கியினாலும், கமத்தொழில் கைத்தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனத்தாலும் வழங்கப்பட்ட கடன்களின் அளவுகளிற் சிறு அதிகரிப்புகள் ஏற்பட்டிருக்க, கடன் சபையினால் வழங்கப்பட்ட கடன்கள் சிறிதளவாற் குறைவுற்றன.

1968இற் சேமிப்பு வைப்புக்களிலும், சேமிப்புச் சான்றிதழ்களிலும் காணப்பட்ட போக்குகளை அட்டவணை II (ஈ) 23 சுருக்கமாகத் தருகின்றது. முந்திய ஆண்டினைப் போலவே வர்த்தக வங்கிகளினுடனான தவணை, சேமிப்பு வைப்புக்கள் 1968இல் இவ்வகைச் சேமிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புகளுக்குக் காரணமாகவிருந்தன. தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியுடனும், இலங்கைச் சேமிப்பு வங்கியுடனுமான சேமிப்பு வைப்புக்கள் 1968இல் உயர்வுற்றனவாயிருக்கையில், சேமிப்புச் சான்றிதழ்களின் பெறுமதி முந்திய ஆண்டினை விடச் சிறிதளவாலேயே அதிகரித்திருந்தது. ஊழியர் சேமநிதியின் மொத்தச் சேகரிப்புக்கள், 1967ற்குரிய 744 இலட்சம் ரூபாய்களுக்கெதிராக 1968இல் 871 இலட்சம் ரூபாய்களாக விளங்கின.

### அட்டவணை II (ஈ) 23

### சேமிப்பு வைப்புக்களும் சேமிப்புச் சான்றிதழ்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1967 திசெம்பர் | 1968 திசெம்பர் | மாற்றம் 57 திசெம்பர்/ 68 திசெம்பர் |
|---|---|---|---|
| தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி... ... ... | 450.6 | 463.0* | — 12.4 |
| இலங்கைச் சேமிப்பு வங்கி ... ... ... | 93.2 | 96.9* | 3.7 |
| வர்த்தக வங்கிகள் (தவணை, சேமிப்பு வைப்புக்கள்)** | 700.8 | 826.2 | —125.4 |
| வெளிநிற்கின்ற சேமிப்புச் சான்றிதழ்கள் ... | 78.7 | 91.3 | — 12.6 |
| மொத்தம் ... ... ... ... ... | 1,323.3 | 1,477.4* | —154.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* தற்காலிகமானவை.

** அரசாங்க வைப்புக்களையும் உள்ளடக்கும்.